SURA'S

TN-TET

Tamilnadu Teacher Eligibility Test

சமூக அறிவியல்

4 in 1

தாள் – II

சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்
சென்னை

E261

© PUBLISHERS

Tamilnadu Teacher Eligibility Test

தாள் II - சமூக அறிவியல்

ISBN: 978-93-6417-132-8

குறியீட்டு எண் : E261

(வெளியீட்டாளர்களின் எழுத்து மூலமான அனுமதி இன்றி இப்புத்தகத்தை மறுபதிப்புச் செய்யவோ, வேறு மொழிகளில் மொழிபெயர்க்கவோ, அச்சடிக்கவோ, போட்டோகாபி செய்யவோ கூடாது)

சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்

தலைமை அலுவலகம்: 1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை-600 040. ☎ 91-44-4862 9977, 4204 3273

ஜி.டி. கிருஷ்ணா பிரஸ், சென்னை – 600 102–இல் அச்சடிக்கப்பட்டு,
சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்
1620, 'ஜே' பிளாக், 16–ஆவது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை – 600 040 இல்
திரு. வீ.வீ.கே. சுப்புராசு அவர்களால் வெளியிடப்பட்டது.
தொலைபேசி : 91–44–4862 9977
email: suracollege@gmail.com; enquiry@surabooks.com; website: www.surabooks.com

பொருளடக்கம்

பக்கம்

TN-TET–2026 தாள்–2 சமூக அறிவியல் ஒரிஜினல் வினாத்தாள் விடைகளுடன் 28
TN-TET–2025 தாள்–2 சமூக அறிவியல் ஒரிஜினல் வினாத்தாள் விடைகளுடன் 13
TN-TET–2023 தாள்–2 சமூக அறிவியல் ஒரிஜினல் வினாத்தாள் விடைகளுடன்..... 15

குழந்தை மேம்பாடும் கற்பித்தல் முறைகளும் ..... 1 - 112

கல்வி உளவியல் ..... 1 - 48

தமிழ்

இலக்கண விளக்கவுரை ..... 2 - 47
இலக்கணம் - பயிற்சி வினாக்கள்..... 48 - 64
செய்யுள் இலக்கியம்..... 65 - 154
உரைநடை இலக்கியம் ..... 155 - 272
கூடுதல் தகவல் - பொதுத் தமிழ் ..... 1 - 16

English

PROSE..... 1 - 49
POEM..... 50 - 95
SUPPLEMENTARY ..... 96 - 114
GRAMMAR..... 115 - 192

சமூக அறிவியல்

வரலாறு ..... 1 – 176
குடிமையியல்..... 1 – 64
புவியியல்..... 1 – 144
பொருளியல்..... 1 – 48

❖❊❊❊❊❖

Teacher Eligibility Test (TET)

Schedule of Examination :

PAPER	TIMING
PAPER - I	3 hours
PAPER - II	3 hours

Pattern of Examination :-

The TN-TET examination will be of objective type with 150 questions. There will be no negative marks for wrong answers marked.

(i) Teachers who are already teaching I-V classes and those who wish to apply for the same in future are compelled to write Paper I exam. and score 60%.

(ii) Teachers who are already teaching VI-VIII classes and those who wish to apply for the same in future are compelled to write Paper II exam. and score 60%.

Note : Those who intend to be a teacher for both the levels (classes I to V and classes VI to VIII) must score 60% in each paper. (Paper I and Paper II)

SCHEME OF THE EXAMINATION

PAPER II (for Social Science Teachers)

Total Time : 3 Hours

S.No.	Subjects	No. of Questions	Marks
1.	Child Development and Pedagogy	30	30
2.	Language I (Medium of Instruction)	30	30
3.	Language II (Chosen from a list other than Language I)	30	30
4.	Social Science	60	60
		Total Questions - 150	Total Marks - 150

- Questions on Child Development and Pedagogy will focus on educational psychology of teaching and learning relevant to the age group of 6-11 years. Emphasis will be laid on understanding the characteristics and needs of diverse learners, interaction with learners and the attributes and qualities of a good facilitator of learning.
- Questions on Language I & II will focus on proficiency, elements of language, communication and comprehension abilities.
- Questions on Social Studies will focus on the concepts, problem solving abilities and pedagogical understanding of these subjects. Questions will be evently distributed over different divisions of the syllabus of that subject as prescribed for Classes VI to VIII by the appropriate Government.

தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு
ஒரிஜினல் வினாத்தாள் - 2026

காலம் : 3 மணி நேரம்
மதிப்பெண் : 150

தாள் – II (சமூக அறிவியல்)

நாள் : 05.07.2026

பகுதி - I குழந்தை மேம்பாடு மற்றும் கற்பித்தல்

1. கீழே இரண்டு கூற்றுகள் தரப்பட்டுள்ளன.

கூற்று I : தொடர்ச்சியற்ற கண்ணோட்டத்தை ஏற்றுக் கொள்ளும் கோட்பாடுகள் வளர்ச்சி நிலைகளில் நடைபெறுவதாகக் கருதுகின்றன.

கூற்று II : குறிப்பிட்ட காலத்தில் நிகழும் சிந்தித்தல், உணர்தல் மற்றும் நடத்தை தரம் சார்ந்த மாற்ற நிலைகளின் குணங்களாகும்.

மேலே உள்ள கூற்றின் அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள விருப்பங்களிலிருந்து மிகவும் பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

A) கூற்று I மற்றும் கூற்று II இரண்டும் சரி
B) கூற்று I மற்றும் கூற்று II இரண்டும் தவறானவை
C) கூற்று I சரி, ஆனால் கூற்று II தவறானது
D) கூற்று I தவறானது ஆனால் கூற்று II சரி

விளக்கம் : விடை : (A)

குழந்தை வளர்ச்சியில் இரண்டு முக்கியக் கண்ணோட்டங்கள் உள்ளன:

தொடர்ச்சியான வளர்ச்சி (Continuous Development): இது படிப்படியாக, சீராக நிகழும் மாற்றம்.

தொடர்ச்சியற்ற வளர்ச்சி (Discontinuous Development): இது குறிப்பிட்ட நிலைகளில் (Stages) திடீரென நிகழும் தரம் சார்ந்த மாற்றம்.

தொடர்ச்சியற்ற வளர்ச்சிக் கோட்பாடுகளைக் கூறும் அறிஞர்கள் (உதாரணமாக: ஜீன் பியாஜே, எரிக் எரிக்சன்), மனித வளர்ச்சி என்பது சீராக இல்லாமல், சில குறிப்பிட்ட வளர்ச்சி நிலைகளாக (Stages of Development) பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றாக நிகழ்கிறது என்று நம்புகின்றனர். எனவே, கூற்று I சரியானது.

வளர்ச்சி நிலைகள் (Stages) என்று வரும்போது, ஒவ்வொரு நிலையிலும் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் குழந்தையின் சிந்தனை திறன், உணர்வுகள் மற்றும் நடத்தை ஆகியவற்றில் தரம் சார்ந்த (Qualitative) மாற்றங்கள் ஏற்படும். முந்தைய நிலையை விட அடுத்த நிலை முற்றிலும் மாறுபட்ட புதிய குணங்களைக் கொண்டிருக்கும். எனவே, கூற்று II சரியானது.

2. பொருத்துக.

பட்டியல் – I எதிர்வினை	பட்டியல் – II செயல்பாடுகள்
a) கண்சிமிட்டல்	1. உணவளிக்க அனுமதிக்கிறது
b) வேரூன்றல்	2. குழந்தை தாயிடம் ஒட்டிக் கொள்ள உதவுகிறது
c) உறிஞ்சல்	3. குழந்தைகளுக்கு முலைக்காம்பு கண்டுபிடிக்க உதவுகிறது
d) மொரோ	4. குழந்தைகள் வலுவான தூண்டுதலில் இருந்து பாதுகாக்கிறது

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	1	3	2	4
B)	4	3	1	2
C)	1	2	4	3
D)	4	3	2	1

விளக்கம் : விடை : (B)

கண்சிமிட்டல் – குழந்தைகள் வலுவான தூண்டுதலில் இருந்து பாதுகாக்கிறது. திடீரென ஏற்படும் பிரகாசமான ஒளி அல்லது காற்று போன்ற வெளிப்புறத் தூண்டுதல்களிலிருந்து குழந்தைகளின் கண்களைப் பாதுகாத்துக் கொள்ள இந்த எதிர்வினை உதவுகிறது.

வேரூன்றல் – குழந்தைகளுக்கு முலைக்காம்பு கண்டுபிடிக்க உதவுகிறது. இது உணவூட்டலுக்கு இன்றியமையாதது.

உறிஞ்சுதல் – உணவளிக்க அனுமதிக்கிறது: குழந்தையின் வாயில் ஏதேனும் பொருள் படும்போது, அது தானாகவே உறிஞ்சத் தொடங்குகிறது. இது குழந்தை தாய்ப்பால் அல்லது உணவை உட்கொள்வதற்குக் காரணமாக அமைகிறது.

மொரோ – குழந்தை தாயிடம் ஒட்டிக் கொள்ள உதவுகிறது. திடீரென ஏற்படும் சத்தம் அல்லது சமநிலை இழப்பின் போது குழந்தை கைகளையும் கால்களையும் அகல விரித்து, பின்னர் உடலோடு சேர்த்துக் கொள்ளும் (திடுக்கிடும் எதிர்வினை). பரிணாம வளர்ச்சியின் படி, இது ஆபத்தான காலங்களில் குழந்தை தாயைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளவோ அல்லது ஒட்டிக் கொள்ளவோ உதவுகிறது.

3. பியாஜெட்டின் உணர்ச்சி இயக்க நிலைகளின் துணை நிலைகளை காலவரிசையில் ஒழுங்கமைக்க:

a) இரண்டாம் நிலை சுழற்சி எதிர் வினைகளின் ஒருங்கிணைப்பு
b) முதன்மை சுழற்சி எதிர்வினைகள்
c) பிரதிபலிப்பு வடிவமைப்பு
d) இரண்டாம் சுழற்சி எதிர்வினைகள்

சரியான விடையை தேர்ந்தெடுக்க:

A) (a), (b), (c), (d)
B) (b), (a), (c), (d)
C) (c), (b), (d), (a)
D) (d), (a), (c), (b)

விளக்கம் : விடை : (C)

பியாஜெட்டின் (Piaget) உணர்ச்சி இயக்க நிலையில் 6 நிலைகள் உள்ளன.

பிரதிபலிப்பு வடிவமைப்பு (1 மாதம் வரை):

குழந்தை பிறப்பிலிருந்தே இயல்பாகச் செய்யும் உறிஞ்சுதல், கண் சிமிட்டுதல் போன்ற தானியங்கி இந்த முதல் நிலையில் அடங்கும்.

முதன்மை சுழற்சி எதிர்வினைகள் (1 – 4 ஆம் மாதம் வரை)

குழந்தை தனது சொந்த உடலின் மூலம் தற்செயலாகப் பெற்ற இன்பமான அனுபவங்களை மீண்டும் மீண்டும் செய்ய முயற்சிக்கும். (உதாரணமாக: கட்டைவிரலைச் சுவைப்பது)

இரண்டாம் சுழற்சி எதிர்வினைகள் (4 முதல் 8 மாதங்கள்):

குழந்தை தனது உடலைத் தாண்டி, சுற்றியுள்ள பொருட்களின் மீது கவனம் செலுத்தி, சுவாரஸ்யமான செயல்களை மீண்டும் செய்யும் (உதாரணமாக: சத்தத்திற்காகக் கிலுகிலுப்பையை ஆட்டுவது).

இரண்டாம் நிலை சுழற்சி எதிர் வினைகளின் ஒருங்கிணைப்பு (8 முதல் 12 மாதங்கள்):

குழந்தை ஒரு இலக்கை அடையத் திட்டமிட்டுச் செயல்படும். தான் கற்றுக்கொண்ட முந்தைய செயல்களை ஒருங்கிணைத்துப் புதிய சூழ்நிலைகளில் பயன்படுத்தும்.

4. அனுமானம் (A) : ஜீன் பியாஜெட் குழந்தைகள் தங்கள் சொந்த செயல்பாட்டின் மூலம் தங்கள் உலகத்தைப் பற்றிய அனைத்து அறிவையும் கண்டுபிடிப்பதாகவோ அல்லது உருவாக்குவதாகவோ கருதினார்.

காரணம் (R) : ஜீன் பியாஜெட்டின் அறிவாற்றல் வளர்ச்சிக் கோட்பாடு, அறிவாற்றல் வளர்ச்சிக்கான ஒரு பூர்வீக அணுகுமுறையாக விவரிக்கப்படுகிறது.

A) (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை மற்றும் (R), ஆனது (A) விற்கான சரியான விளக்கமாகும்.

B) (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை மற்றும் (R), ஆனது (A) விற்கான சரியான விளக்கமில்லை.

C) (A) சரியானது ஆனால் (R) தவறானது.

D) (A) தவறானது ஆனால் (R) சரியானது

விளக்கம் : **விடை : (C)**

அனுமானம் A விளக்கம் :

பியாஜெட்டின் அறிவாற்றல் வளர்ச்சி கோட்பாட்டின்படி (Cognitive Development Theory), குழந்தைகள் தங்களைச் சுற்றியுள்ள உலகத்துடன் நேரடியாகச் செயல்பட்டு, தங்களின் சொந்த அறிவை தாங்களாகவே கட்டமைத்துக் கொள்கிறார்கள். எனவே அவர்கள் "சிறு விஞ்ஞானிகள்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

காரணம் (R) தவறு :

விளக்கம்: பியாஜெட்டின் கோட்பாடு ஒரு பூர்வீக அணுகுமுறை (Nativist approach) அல்ல. அது ஒரு கட்டமைப்பியல் அணுகுமுறை (Constructivist approach) ஆகும். பூர்வீக அணுகுமுறை என்பது அறிவு பிறப்பிலேயே மரபணு ரீதியாக தீர்மானிக்கப்படுகிறது. ஆனால், பியாஜெட் சூழலுடனான தொடர்புகளின் மூலமே அறிவு கட்டமைக்கப்படுகிறது என்று கூறினார்.

5. கூற்று I : பியாஜெட்டின் கூற்றுப்படி, செயல்பாட்டுக்கு முந்தைய சிந்தனையின் மிக அடிப்படையான குறைபாடு சுயநலம் ஆகும்.

கூற்று II : தன் முனைப்பு சுயநலம் என்பது மற்றவர்களின் குறியீட்டு கண்ணோட்டங்களை ஒருவரின் சொந்தக் கண்ணோட்டத்திலிருந்து வேறுபடுத்திப் பார்க்கும் திறன் ஆகும்.

A) கூற்று I மற்றும் கூற்று II இரண்டும் சரி

B) கூற்று I மற்றும் கூற்று II இரண்டும் தவறானவை

C) கூற்று I சரி, ஆனால் கூற்று II தவறானது

D) கூற்று I தவறானது ஆனால் கூற்று II சரி

விளக்கம் : **விடை : (C)**

கூற்று I விளக்கம் :

ஜீன் பியாஜெட்டின் (Jean Piaget) அறிவாற்றல் வளர்ச்சி கோட்பாட்டின்படி, 2 முதல் 7 வயது வரையிலான, பருவம் செயல்பாட்டுக்கு முந்தைய நிலை (Preoperational Stage) எனப்படும். இப்பருவத்தில் உள்ள குழந்தைகளின் முக்கிய குறைபாடு தன்முனைப்பு அல்லது சுயநலம் (Egocentrism) ஆகும். எனவே, கூற்று I சரியானது.

கூற்று II தவறு :

தன்முனைப்பு (Egocentrism) என்பது மற்றவர்களின் உணர்வுகளையும், பார்வைகளையும் தங்களின் சொந்தக் கண்ணோட்டத்திலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாத ஒரு மனநிலையாகும். குழந்தைகள் உலகம் முழுவதும் தங்களைப் போலவே சிந்திப்பதாக நினைப்பார்கள். ஆனால், இக்கூற்றில் "வேறுபடுத்திப் பார்க்கும் திறன்" என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, கூற்று I தவறானது.

6. கூற்று I: சூழலியல் அமைப்புக் கோட்பாட்டின்படி, உள்ளார்ந்த நிலை என்பது குழந்தையின் உள்ளார்ந்த சூழலில் செயல்பாடுகள் மற்றும் தொடர்பு முறைகளைக் கொண்டுள்ளது.

கூற்று II : இந்த நிலையில் குழந்தை வளர்ச்சியைப் புரிந்து கொள்ள, அனைத்து உறவுகளும் ஒரு தலைப்பட்சமானவை என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும் என்று பிரான்பென்ப்ரென்னர் வலியுறுத்திகிறார்.

A) கூற்று I மற்றும் கூற்று II இரண்டும் சரியானவை

B) கூற்று I மற்றும் கூற்று II இரண்டும் தவறானவை

C) கூற்று I சரியானது, ஆனால் கூற்று II தவறானது

D) கூற்று I தவறானது ஆனால் கூற்று II சரியானது

விளக்கம் : **விடை : (C)**

கூற்று I விளக்கம் :

பிரான்ஃபென்பிரென்னரின் கோட்பாட்டின்படி, ஒரு குழந்தையின் வளர்ச்சி ஐந்து வகையான சுற்றுச்சூழல் அடுக்குகளால் பாதிக்கப்படுகிறது. இதில் முதல் மற்றும் மிக நெருக்கமான அடுக்கு உள்ளார்ந்த நிலை (Microsystem) எனப்படும். இதில் குழந்தையின் குடும்பம், பள்ளி, நண்பர்கள் மற்றும் அக்கம் பக்கத்தினர். போன்ற நேரடிச் சூழல் அடங்கும். இந்தச் சூழலில் தான் குழந்தை தனது அன்றாடச் செயல்பாடுகள் மற்றும் தொடர்புகளை நேரடியாக மேற்கொள்கிறது. எனவே, கூற்று I சரி.

கூற்று II தவறு :

உள்ளார்ந்த நிலையில் உள்ள உறவுகள் அனைத்தும் ஒருதலைப்பட்சமானவை அல்ல; மாறாக அவை இருவழித் தொடர்பு அல்லது இருதலைப்பட்சமானவை என்று பிரான்ஃபென்பிரென்னர் கூறுகிறார். அதாவது, பெற்றோரின் நடத்தைகள் மற்றும் சூழல், குழந்தையைப் பாதிப்பது போலவே, குழந்தையின் குணாதிசயங்களும் நடத்தைகளும் பெற்றோரைப் பாதிக்கும் (இருபுறமும் தாக்கம் இருக்கும்). வினாவில் இவை "ஒருதலைப்பட்சமானவை" என்று குறிப்பிடப்பட்டுள்ளதால், கூற்று II தவறானது.

7. **சுற்றுச்சூழல் அமைப்புகள் கோட்பாட்டின் மூலம் முன்மொழியப்பட்ட நிலைகளுக்கு ஏற்ப தனிநபர் சூழல்களை ஒழுங்குபடுத்துக.**

a) வீடு, பள்ளி மற்றும் அருகாமை

b) கலாச்சார விழுமங்கள், விதிகள் மற்றும் வளமூலங்கள்

c) தனிநபர் மற்றும் அவனுடைய உடன்சூழல்

d) மதநிறுவனங்கள், பெற்றோர் பணியிடம்

சரியான விடையை தேர்ந்தெடுக்க:

A) (a), (c), (d), (b)

B) (d), (c), (a), (b)

C) (c), (a), (d), (b)

D) (b), (c), (d), (a)

விளக்கம் : **விடை : (C)**

ஒரு குழந்தையின் வளர்ச்சியைச் சுற்றியுள்ள சூழல் எவ்வாறு பாதிக்கிறது என்பதை யுரி ப்ரோன்ஃபென்பிரென்னரின் சுற்றுச்சூழல் அமைப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. இதனை உள் வட்டத்திலிருந்து வெளிவட்டம் நோக்கி வரிசைப்படுத்த வேண்டும்.

(i) தனி நபர் மற்றும் அவனுடைய உடன் சூழல் மையப் பகுதியாகும்

(ii) வீடு, பள்ளி மற்றும் தனிநபர் தினமும் நேரடியாகப் பழகும் மற்றும் செயல்படும் உடனடிச் சூழல்

(iii) மதநிறுவனங்கள், பெற்றோர் பணியிடம் தனிநபர் இதில் நேரடியாக பங்கேற்காவிட்டாலும், இது அவரது வாழ்க்கையைப் பாதிக்கும் மறைமுகச் சூழல் (உதாரணமாக பெற்றோரின் வேலை அழுத்தம் குழந்தையைப் பாதிப்பது)

(iv) கலாச்சார விழுமங்கள், விதிகள் மற்றும் வளமூலங்கள் சமுதாயத்தின் கலாச்சாரம், சட்டங்கள், மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகளைக் குறிக்கும் வெளிவட்டச் சூழல்.

8. கூற்று I : கீழ்நிலை மனத் தூண்டுதல்களுக்கும் மேனிலை மனதின் கோரிக்கைகளுக்கும் இடையில் ஈகோவின் மத்தியஸ்தப் பங்கை எரிக் எரிக்சன் நிராகரிக்கிறார்.

கூற்று II : ஒவ்வொரு கட்டத்திலும் ஈகோ வளர்ச்சிக்கு நேர்மறையான பங்களிப்பை அளிக்கிறது. மனப்பான்மைகளையும் திறன்களையும் பெறுகிறது. இது தனி நபரை சமூகத்தின் சுறுசுறுப்பான பங்களிப்பு செய்யும் உறுப்பினராக ஆக்குகிறது என்பதை எரிக் எரிக்சன் ஏற்றுக் கொள்கிறார்.

A) கூற்று I மற்றும் கூற்று II இரண்டும் சரியானவை
B) கூற்று I மற்றும் கூற்று II இரண்டும் தவறானவை
C) கூற்று I சரியானது. ஆனால் கூற்று II தவறானது
D) கூற்று I தவறானது ஆனால் கூற்று II சரியானது

விளக்கம் : விடை : (D)

கூற்று I விளக்கம்

சிக்மண்ட் பிராய்டு (Sigmund Freud) என்பவரே மனித மனதை Id (கீழ்நிலை மனம்), Ego (நடுநிலை மனம்), Superego (மேல்நிலை மனம்) எனப் பிரித்து, அவற்றிற்கு இடையே ஈகோ மத்தியஸ்தம் செய்கிறது என்று கூறினார்.

எரிக் எரிக்சன் (Erik Erikson) பிராய்டின் இந்த ஈகோ கோட்பாட்டை முழுமையாக நிராகரிக்கவில்லை, மாறாக அதை விரிவுபடுத்தினார். எனவே, ஈகோவின் மத்தியஸ்தப் பங்கை அவர் "நிராகரிக்கிறார்" என்று கூறுவது தவறானது.

கூற்று II விளக்கம்:

எரிக் எரிக்சன், மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை அவனது ஈகோ எவ்வாறு சமூகச் சூழலுக்கு ஏற்ப நேர்மறையாக வளர்ச்சியடைகிறது என்பதைத் தனது 8 நிலைக் கோட்பாட்டில் விளக்கியுள்ளார்.

ஒவ்வொரு நிலையிலும் மனிதன் புதிய திறன்களையும், நேர்மறையான மனப்பான்மைகளையும் பெற்று, சமூகத்தில் ஒரு சுறுசுறுப்பான மற்றும் பயனுள்ள உறுப்பினராக மாறுகிறான் என்பதை எரிக்சன் உறுதியாக ஏற்றுக் கொள்கிறார். எனவே இக்கூற்று முற்றிலும் சரியானது.

9. பொருந்துக.

பட்டியல் – I	பட்டியல் – II
a) மீசோ அமைப்பு	1. குழந்தையின் உடனடிச் சூழல்
b) எக்ஸோ அமைப்பு	2. கலாச்சார மதிப்புகள் மற்றும் பழக்கவழக்கங்கள்
c) நுண் அமைப்பு	3. நுண் அமைப்புகளுக்கு இடையேயான இணைப்புகள்
d) பேரளவு அமைப்பு	4. முறையான நிறுவன அமைப்புகள்

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	2	3	4	1
B)	3	4	1	2
C)	4	1	3	2
D)	1	2	3	4

விளக்கம் : விடை : (B)

மீசோ அமைப்பு – நுண் அமைப்புகளுக்கு இடையேயான இணைப்புகள்

நுண் அமைப்புகளுக்கு இடையே ஏற்படும் தொடர்புகளை இது குறிக்கிறது.

உதாரணம்: பெற்றோர்–ஆசிரியர் சந்திப்பு (குடும்பத்திற்கும் பள்ளிக்கும் இடையிலான இணைப்பு).

எக்ஸோ அமைப்பு – முறையான நிறுவன அமைப்புகள்

குழந்தை இதில் நேரடியாகப் பங்கேற்காது, ஆனால் இந்தச் சூழல் குழந்தையின் வாழ்க்கையைப் பாதிக்கும்.

உதாரணம்: பெற்றோரின் வேலை செய்யும் இடம், சமூக நல நிறுவனங்கள், அரசுத் திட்டங்கள் (முறையான நிறுவன அமைப்புகள்).

நுண் அமைப்பு – குழந்தையின் உடனடிச்சூழல்

இது குழந்தையோடு நேரடியாகத் தொடர்புடைய மிக நெருங்கிய சூழலாகும். உதாரணம்: குடும்பம், பள்ளி, நண்பர்கள் மற்றும் அக்கம் பக்கத்தினர் (குழந்தையின் உடனடிச் சூழல்).

பேரளவு அமைப்பு – கலாச்சார மதிப்புகள் மற்றும் பழக்கவழக்கங்கள்

இது குழந்தை வாழும் சமூகத்தின் பரந்த கலாச்சாரம் மற்றும் கொள்கைகளைக் குறிக்கிறது. உதாரணம்: சமூகத்தின் கலாச்சார மதிப்புகள், நம்பிக்கைகள், பாரம்பரிய பழக்கவழக்கங்கள் மற்றும் சட்டங்கள்.

10. கீழே இரண்டு கூற்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்று கூற்று (அனுமானம்) (A) என்றும் மற்றொன்று காரணம் (R) என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

அனுமானம் (A) : கவனம் என்பது ஒரு செயல், செயல்முறை அல்லது செயல்பாடாக நன்கு புரிந்து கொள்ளப்படுகிறது.

காரணம் (R) : கவனம் என்பது விரும்பிய முடிவுகளை அடைவதற்காக ஒரு தலைப்பு பொருள், நிகழ்வின் மீதான கவனகுவிப்பு செய்தல், கவனிக்கும் செயல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

மேலே உள்ள கூற்றுகளின் அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள விருப்பங்களிலிருந்து மிகவும் பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

A) (A) மற்றும் (R) இரண்டும் உண்மை மற்றும் (R) என்பது (A) ன் சரியான விளக்கம்.
B) (A) மற்றும் (R) இரண்டும் உண்மை ஆனால் (R) என்பது (A) ன் சரியான விளக்கம் அல்ல.
C) (A) என்பது சரி ஆனால் (R) என்பது தவறு.
D) (A) என்பது தவறு ஆனால் (R) என்பது சரி

விளக்கம் : விடை : (A)

அனுமானம் (A) சரி :

உளவியலின் படி, கவனம் என்பது நமது மூளை ஒரு குறிப்பிட்ட விஷயத்தைத் தேர்ந்தெடுத்து அதன் மீது செலுத்தும் ஒரு அறிவாற்றல் செயல்முறை (Cognitive process) அல்லது செயல்பாடு ஆகும். எனவே, இந்த கூற்று சரியானது.

காரணம் (R) சரி :

நாம் ஒரு குறிப்பிட்ட இலக்கை அல்லது முடிவை அடைய வேண்டுமானால், ஏதேனும் ஒரு பொருள் அல்லது நிகழ்வின் மீது நம் மனதை ஒருமுகப்படுத்த வேண்டும். இதுவே கவனிக்கும் செயல் ஆகும். எனவே, இந்த காரணமும் சரியானது. எனவே, (A) மற்றும் (R) இரண்டும் உண்மை, மேலும் (R) என்பது (A)–விற்கான சரியான விளக்கமாகும்.

11. கீழே கொடுக்கப்பட்டவற்றில் எவை கவனத்தின் உள் தீர்மானங்கள் ஆகும்

a) உள்ளுணர்வு b) புதுமை
c) நோக்கங்கள் d) உடல் நிலை

கீழே கொடுக்கப்பட்டுள்ள விருப்பங்களிலிருந்து சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்.

A) (b), (c) மற்றும் (d) மட்டும்
B) (a), (b) மற்றும் (c) மட்டும்
C) (a), (b) மற்றும் (d) மட்டும்
D) (a), (c) மற்றும் (d) மட்டும்

விளக்கம் : விடை : (D)

(a) உள்ளுணர்வு (Instincts): இது மனிதனின் உள்ளார்ந்த குணம். எனவே இது ஒரு உள் தீர்மானம் ஆகும்.

(b) புதுமை (Novelty): பொருளின் புதிய தன்மை வெளியில் இருந்து கவனத்தை ஈர்க்கும். எனவே இது வெளி தீர்மானம் ஆகும்.

(c) நோக்கங்கள் (Motives): நபரின் தேவைகள் மற்றும் இலக்குகள் சார்ந்தது. எனவே இது ஒரு உள் தீர்மானம் ஆகும்.

(d) உடல் நிலை (Physical state): நபரின் ஆரோக்கியம் அல்லது சோர்வு நிலை சார்ந்தது. எனவே இதுவும் உள் தீர்மானம் ஆகும்.

இதன் அடிப்படையில் (a), (c) மற்றும் (d) ஆகிய மூன்றும் உள் தீர்மானங்கள் என்பதால், விருப்பம் (D) சரியான பதிலாகும்.

12. இரண்டு கூற்றுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கூற்று I : பழக்கம் படுத்துதல் என்பது மூளை மாறிவரும் தகவல்களைக் கையாளும் விதம் ஆகும்.

கூற்று II : மாறாத தூண்டுதலுக்கு உணர்திறன் ஏற்பி செல்கள் குறைவான எதிர்வினையாற்றுகின்றன.

மேலே உள்ள கூற்றுகளின் அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள விருப்பங்களிலிருந்து மிகவும் பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

A) கூற்று I மற்றும் கூற்று II ம் சரி

B) கூற்று I மற்றும் கூற்று II ம் தவறு

C) கூற்று I சரி, ஆனால் கூற்று II சரியானதல்ல

D) கூற்று I சரியானதல்ல ஆனால் கூற்று II சரி

விளக்கம் : **விடை : (D)**

கூற்று I தவறு :

பழக்கப்படுத்துதல் (Habituation) என்பது மாறாத அல்லது தொடர்ந்து மீண்டும் மீண்டும் நிகழும் தூண்டுதல்களுக்கு மூளை தனது கவனத்தையோ அல்லது எதிர்வினையையோ குறைத்துக் கொள்ளும் ஒரு செயல்முறையாகும் (எடுத்துக்காட்டாக: கடிகாரத்தின் டிக்-டிக் சத்தம்). ஆனால், கூற்றில் இது மாறிவரும் தகவல்களைக் கையாளும் விதம் என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூற்று II சரி :

ஒரு மாறாத தூண்டுதல் (unchanging stimulus) தொடர்ந்து இருக்கும்போது, நம் உடலில் உள்ள உணர்திறன் ஏற்பி செல்கள் காலப்போக்கில் அதற்கு குறைவான மின் தூண்டல்களையே மூளைக்கு அனுப்புகின்றன. இதுவே உணர்வு ஏற்பி தகவமைப்பு என்று அழைக்கப்படுகிறது (எடுத்துக்காட்டாக: ஒரு அறைக்குள் நுழையும்போது இருக்கும் வாசனை சிறிது நேரத்தில் நமக்குத் தெரியாமல் போவது). எனவே இந்த கூற்று முற்றிலும் சரியானது.

13. கீழே இரண்டு கூற்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்று கூற்று (அனுமானம்) (A) என்றும் மற்றொன்று காரணம் (R) என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

அனுமானம் (A) : ஒரு நபர் உண்மையல்லாத ஒன்றை பார்க்கின்றார் அல்லது கேட்கிறார்.

காரணம் (R) : ஒரு மாயை என்பது யதார்த்தத்துடன் ஒத்துப் போகாத ஒரு புலன்காட்சி ஆகும்.

மேலே உள்ள கூற்றுகளின் அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள விருப்பங்களிலிருந்து மிகவும் பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி மற்றும் (R), (A) ன் சரியான விளக்கம் ஆகும்.

B) (A) மற்றும் (R) இரண்டும் சரி ஆனால் (R), (A) ன் சரியான விளக்கம் அல்ல.

C) (A) சரி ஆனால் (R) தவறு.

D) (A) தவறு ஆனால் (R) சரி

விளக்கம் : **விடை : (B)**

கூற்று (A) சரி: ஒரு நபர் உண்மையில் அங்கு இல்லாத ஒரு பொருளைப் பார்ப்பதையோ அல்லது ஒலியைக் கேட்பதையோ 'மனப்பிரமை' என்று உளவியலில் கூறுவர். எனவே, இந்த கூற்று உண்மை.

காரணம் (R) சரி: மாயை என்பது நிஜ உலக யதார்த்தத்தோடு ஒத்துப்போகாத ஒரு புலன்காட்சி ஆகும். இருக்கும் ஒரு பொருளை வேறொன்றாக புரிந்துகொள்வது இதில் அடங்கும். எனவே, இந்த காரணமும் உண்மை.

இவ்விரண்டும் உளவியல் ரீதியாக வெவ்வேறு கருத்துக்கள் என்பதால், காரணம் (R) என்பது கூற்று (A)-விற்கான சரியான விளக்கமாக அமையாது. எனவே, இரண்டு வாக்கியங்களும் தனித்தனியே சரியானவை, ஆனால் ஒன்றிற்கு ஒன்று சரியான விளக்கமல்ல.

14. அனுமானம் (A) : பல்வேறு துறைகளில் உள்ள அறிவுசார்ந்த கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கம் ஆகியன முயற்சி-பிறழ்ச்சி செயலின் விளைவுகளே ஆகும்.

காரணம் (R) : விலங்குகள் முயற்சி-பிறழ்ச்சி வழிமுறையையே பின்பற்றுகின்றன.

A) (A), (R) ஆகிய இரண்டும் சரியானவை ஆகும் மற்றும் (R), என்பது (A) க்கான சரியான விளக்கம் ஆகும்.

B) (A), (R) ஆகிய இரண்டும் சரியானவையே ஆனால் (R), என்பது (A) க்கான சரியான விளக்கம் அல்ல.

C) (A) என்பது சரி ஆனால் (R) என்பது தவறு

D) (A) என்பது தவறு ஆனால் (R) என்பது சரி

விளக்கம் : **விடை : (B)**

அனுமானம் A விளக்கம்:

மனிதர்களின் பெரியகண்டுபிடிப்புகளும், புதியபுதியஉருவாக்கங்களும் பெரும்பாலும் "முயற்சி- பிறழ்ச்சி" செயலின் விளைவுகளே ஆகும். அதாவது, மீண்டும் மீண்டும் முயற்சி செய்து, தவறுகளைத் திருத்திக் கொள்வதன் மூலமே புதியவை கண்டுபிடிக்கப்படுகின்றன. எனவே, இந்த கூற்று சரி.

காரணம் R விளக்கம்:

உளவியல் மற்றும் அறிவியல் பூர்வமாக, விலங்குகள் தங்களின் உணவைத் தேடவோ அல்லது ஒரு சூழ்நிலையைக் கையாளவோ 'முயற்சி-பிறழ்ச்சி' முறையையே முதன்மையாகப் பயன்படுத்துகின்றன. எனவே, இந்த கூற்றும் சரி.

ஆனால், மனித புத்தாக்கம் என்பது விலங்குகளின் கற்றலை விட மிக உயர்ந்த சிந்தனைத் திறன் கொண்டது. எனவே, (A), (R) ஆகிய இரண்டும் சரியானவையே ஆனால் (R) என்பது (A) க்கான சரியான விளக்கம் அல்ல.

15. கீழ்காண்பனவற்றில் எவையெவை தார்ண்டைக் கூறும் விதிகளுள் அடங்கும்?

a) மனப்பான்மை விதி **b)** ஒத்த தன்மை விதி

c) உருவக விதி **d)** இணைப்பு மாறும் விதி

சரியான விடையை தேர்ந்தெடுக்க:

A) (b), (c), மற்றும் (d), மட்டும்

B) (a), (b), மற்றும் (c), மட்டும்

C) (a), (b), மற்றும் (d), மட்டும்

D) (a), (c), மற்றும் (d), மட்டும்

விளக்கம் : **விடை : (D)**

எட்வர்ட் தார்ண்டைக் (Edward Thorndike) கற்றல் கோட்பாட்டில் மூன்று முதன்மை விதிகளையும், ஐந்து துணை விதிகளையும் தந்துள்ளார்.

(a) மனப்பான்மை விதி (Law of Attitude): இது தார்ண்டைக்கின் துணை விதியாகும். கற்றலில் சரியான மனநிலை அவசியம் என்பதை விளக்குகிறது.

(b) ஒத்த தன்மை விதி (Law of Similarity): தார்ண்டைக்கின் விதி அல்ல. இது அரிஸ்டாட்டிலின் தொடர்பு விதிகளில் (Laws of Association) வரும்.

(c) உருவக விதி (Law of Analogy): இது தார்ண்டைக்கின் துணை விதியாகும். புதிய சூழலில் பழைய ஒத்த அனுபவங்களைப் பயன்படுத்துவதைக் குறிக்கும்.

(d) இணைப்பு மாறும் விதி (Law of Associative Shifting): இது தார்ண்டைக்கின் துணை விதியாகும். ஒரு தூண்டலின் துலங்கலை மற்றொரு புதிய தூண்டலுக்கு மாற்றுவதாகும்.

எனவே, (b) தவிர மற்ற மூன்றும் தார்ண்டைக்கின் விதிகளுக்குள் அடங்கும்.

16. கூற்று I : திரவ நுண்ணறிவு என்பது நாம் வாழ்நாள் அனுபவத்தில் சேமித்து வைக்கும் திரட்டப்பட்ட அறிவைக் குறிக்கிறது.
கூற்று II : திரவ நுண்ணறிவு வயதுக்கு ஏற்ப மெதுவாகக் குறைவது போல் தெரிகிறது.
A) கூற்று I மற்றும் கூற்று II இரண்டும் சரியானவை
B) கூற்று I மற்றும் கூற்று II இரண்டும் தவறானவை
C) கூற்று I சரியானது ஆனால் கூற்று II தவறானது
D) கூற்று I தவறானது ஆனால் கூற்று II சரியானது

விளக்கம் : விடை : (D)

வாழ்நாள் அனுபவங்கள், கல்வி மற்றும் பயிற்சி மூலம் நாம் பெறும் அறிவு படிகமாக்கப்பட்ட நுண்ணறிவு (Cristallized intelligence) அழைக்கப்படுகிறது. ஆனால், கேள்வியில் இது 'திரவ நுண்ணறிவு' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் கூற்று I தவறாகும்.

திரவ நுண்ணறிவு (Fluid Intelligence) என்பது புதிய சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல், தர்க்கரீதியாகச் சிந்திக்கும் திறன் மற்றும் வேகத்தைக் குறிக்கும். இது மனிதர்களுக்கு இளமைப் பருவத்தில் உச்சத்தை அடைந்து, வயது முதிர்ச்சியடையும் போது இயற்கையாகவே மெதுவாகக் குறையத் தொடங்கும். எனவே கூற்று II சரியானது.

17. பொருத்துக:

பட்டியல் – I	பட்டியல் – II
a) இருகாரணிக் கோட்பாடு	1. L.L. தர்ஸ்டோன்
b) குழுக்காரணிக் கோட்பாடு	2. E.L. தார்ண்டைக்
c) பல்காரணிக் கோட்பாடு	3. ஸ்டெர்ன்பெர்க்
d) முக்காரணிக் கோட்பாடு	4. ஸ்பியர்மென்

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	1	2	3	4
B)	3	4	2	1
C)	4	1	2	3
D)	2	4	1	3

விளக்கம் : விடை : (C)

இருகாரணிக் கோட்பாடு – ஸ்பிடர்மேன்

சார்லஸ் ஸ்பியர்மேன் நுண்ணறிவை அளவிட 'இரு காரணி கோட்பாட்டை' உருவாக்கினார். அவை: பொதுக் காரணி ('g' factor) மற்றும் சிறப்புக் காரணி ('s' factor).

குழுக்காரணிக் கோட்பாடு – L.L. தர்ஸ்டோன்

லூயிஸ் தர்ஸ்டோன் நுண்ணறிவு என்பது பல முதன்மை மனத் திறன்களைக் கொண்ட 'குழு காரணி கோட்பாடு' என்று கூறினார்.

பல்காரணிக் கோட்பாடு – E.L. தார்ண்டைக்

எட்வர்ட் தார்ண்டைக் நுண்ணறிவு என்பது பல தனித்துவமான காரணிகளின் தொகுப்பு என்ற பல்காரணி கோட்பாட்டை வழங்கினார்.

முக்காரணிக் கோட்பாடு – ஸ்டர்ன்பெர்க்

ராபர்ட் ஸ்டெர்ன்பெர்க் நுண்ணறிவை மூன்று கூறுகளாக (பகுப்பாய்வு, படைப்பாற்றல், மற்றும் நடைமுறை நுண்ணறிவு) பிரித்து முக்காரணிக் கோட்பாடு என விளக்கினார்.

18. பொருத்துக:

பட்டியல் – I	பட்டியல் – II
a) படைப்பாற்றலை வளர்ப்பது	1. நான்கு நிலைகள்
b) வாலாவின் படைப் பாற்றல் செயல்முறை	2. முதன்மை மற்றும் இரண்டாம் நிலை செயல்முறை
c) அரியெட்டிஸ் படைப்பாற்றல் கோட்பாடு	3. சாகச இயல்பு கொண்ட
d) படைப்பாற்றலின் பண்புகள்	4. அறிவுப் பகர்தல்

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	1	3	2	4
B)	4	1	2	3
C)	1	2	4	3
D)	4	3	2	1

விளக்கம் : விடை : (B)

படைப்பாற்றலை வளர்ப்பது – அறிவுப்பகர்தல்

மாணவர்களிடம் படைப்பாற்றலை (Creativity) தூண்டுவதற்கும் வளர்ப்பதற்கும் 'அறிவுப்பகர்தல்' ஒரு சிறந்த பயிற்றுவிப்பு முறையாகப் பயன்படுத்தப்படுகிறது.

வாலாவின் படைப்பாற்றல் செயல்முறை – நான்கு நிலைகள்

கிரகாம் வாலா என்பாரின் படைப்பாற்றல் சிந்தனை செயல்முறை நான்கு முக்கிய நிலைகளைக் கொண்டது. அவை. ஆயத்தம், உள்வாங்குதல், ஒளிர்தல்/உள்ஒளி தோன்றுதல், சரிபார்த்தல்

அரியெட்டிஸ் படைப்பாற்றல் கோட்பாடு – முதன்மை மற்றும் இரண்டாம் நிலை செயல்முறை

சில்வானோ அரியெட்டிஸ் அவர்களின் படைப்பாற்றல் கோட்பாடு, மனித மனதின் முதன்மை செயல்முறை மற்றும் இரண்டாம் நிலை செயல்முறை இரண்டின் இணைப்பை அடிப்படையாகக் கொண்டது.

படைப்பாற்றலின் பண்புகள் – சாகச இயல்பு கொண்டது

புதிய வழிகளில் சிந்திப்பதும், சவால்களை எதிர்கொள்வதும் படைப்பாற்றலின் முக்கிய பண்புகளாகும். எனவே, இது இயற்கையிலேயே சாகச இயல்பு கொண்டதாகக் கருதப்படுகிறது.

19. அனுமானம் (A) : தம்மைப் புரிந்து கொள்வதில் ஒரு முக்கிய பகுதி, நமது ஆளுமைப் பண்புகள் என்ன என்பதைப் பற்றிய உணர்வை வளர்த்துக் கொள்வதாகும்.
காரணம் (R) : ஆளுமை என்பது ஒரு நபர் பல்வேறு சூழ்நிலைகளில் வெளிக்காட்டும் நடத்தை முறைகள் அல்லது அந்த நடத்தை முறைகளுக்கு வழிவகுக்கும் நபரின் உளவியல் பண்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.
A) (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை மற்றும் (R) ஆனது (A) விற்கான சரியான விளக்கம் ஆகும்.
B) (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை மற்றும் (R) ஆனது (A) விற்கான சரியான விளக்கம் அல்ல.
C) (A) சரியானது ஆனால் (R) தவறானது
D) (A) தவறானது ஆனால் (R) சரியானது

விளக்கம் : விடை : (A)

அனுமானம் (A) விளக்கம்

சுய விழிப்புணர்வு (Self-awareness) அல்லது நம்மைப் பற்றி நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள, நம்மிடம் உள்ள ஆளுமைப் பண்புகள் (Personality traits) என்னென்ன என்பதை நாம் அறிந்திருப்பது மிகவும் அவசியமாகும். எனவே, இந்தக் கூற்று சரியானது.

காரணம் (R) விளக்கம்:

மனிதனின் மனநிலை, அவனது உளவியல் பண்புகள் மற்றும் அவன் வெவ்வேறு சூழ்நிலைகளை எவ்வாறு எதிர்கொள்கிறான் என்பதே அவனது ஆளுமையைத் தீர்மானிக்கிறது. எனவே, இந்தக் காரணமும் சரியானது.

20. பட்டியல் – I றினை பட்டியல் – II யுடன் பொருத்துக:

பட்டியல் – I	பட்டியல் – II
a) இரத்தம்	1. மனவெழுச்சி குறைந்த
b) மஞ்சள்பித்தம்	2. மனச்சோர்வு
c) கபம்	3. நேர்மறை நம்பிக்கை மிகுந்த
d) கரும் பித்தம்	4. முன்கோபம் கொண்ட

குறிமீடுகள் :

	a)	b)	c)	d)
A)	4	1	2	3
B)	4	2	3	1
C)	2	3	4	1
D)	3	4	1	2

விளக்கம் : விடை : (D)

கிரேக்க மருத்துவ அறிஞர் ஹிப்போகிரட்டீஸின் "நான்கு உடல் திரவக் கோட்பாட்டை" அடிப்படையாகக் கொண்டது. மனித உடலின் திரவங்கள் அவர்களின் குணாதிசயங்களை தீர்மானிக்கின்றன.

இரத்தம் – நேர்மறை நம்பிக்கை

இரத்தத் அதிகம் உள்ளவர்கள் மகிழ்ச்சியாகவும், சுறுசுறுப்பாகவும், நேர்மறை எண்ணங்களுடனும் இருப்பார்கள்.

மஞ்சள் பித்தம் – முன்கோபம்

மஞ்சள் பித்தம் அதிகம் உள்ளவர்கள் எளிதில் உணர்ச்சிவசப்படக்கூடியவர்களாகவும், முன்கோபம் மற்றும் ஆக்ரோஷம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

கபம் – மனவெழுச்சி குறைந்த

கபம் (சளி) அதிகம் உள்ளவர்கள் அமைதியானவர்களாகவும், உணர்ச்சிகளை எளிதில் வெளிப்படுத்தாத நிதானமானவர்களாகவும் இருப்பார்கள்.

கரும் பித்தம் – மனச்சோர்வு

கரும் பித்தம் அதிகம் உள்ளவர்கள் எப்போதும் கவலையுடனும், சோகத்துடனும், மனச்சோர்வுடனும் காணப்படுவார்கள்.

21. **ஆளுமை வளர்ச்சியில் அமைந்த பின் வரும் உளப்–பாலியல் நிலைகளை ஒழுங்குபடுத்துக.**
   a) உள்ளார்ந்த வளர்ச்சி நிலை
   b) பாலிக் நிலை
   c) பிறப்புறுப்பு நிலை
   d) வாய்சார்பு நிலை
   e) குத நிலை

   சரியான விடையை தேர்ந்தெடுக்க:
   A) (b), (a), (c), (e), (d)
   B) (c), (e), (a), (b), (d)
   C) (d), (e), (b), (a), (c)
   D) (d), (b), (e), (c), (a)

விளக்கம் : விடை : (C)

சிகமண்ட் பிராய்டின் (Sigmund Freud) உளப்–பாலியல் வளர்ச்சி கோட்பாட்டின் (Psychosexual Stages of Development) படி, மனித ஆளுமை வளர்ச்சி ஐந்து முக்கிய நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

வாய்சார்பு நிலை – பிறப்பு முதல் 1 வயது வரை.

குத நிலை – 1 முதல் 3 வயது வரை.

பாலிக் நிலை – 3 முதல் வயது வரை

உள்ளார்ந்த வளர்ச்சி நிலை – 6 வயது முதல் பருவம் அடையும் வரை

பிறப்புறுப்பு நிலை – பருவம் அடைந்தது முதல் வாழ்நாள் இறுதி வரை

22. **கீழே இரண்டு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று (அனுமானம்) (A) என்றும் மற்றொன்று கர்ரணம் (R) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

அனுமானம் (A) : உள்ளடக்குதல் என்பது ஒரு அடிப்படை மனித உரிமை, அது ஒரு சிறப்புரிமை அல்ல.

காரணம் (R) : பன்முகத் தன்மை கொண்ட கற்றல் சூழலை அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய வகையில் நிவர்த்தி செய்வதே உள்ளடக்குதலின் அடிப்படைத் தத்துவமாகும்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள **வாக்கியங்களின்** அடிப்படையில் மிகவும் பொருத்தமான விடையை தெரிந்தெடுக்கவும்.

A) (A) மற்றும் (R) இரண்டுமே சரி (R), (A)-யின் சரியான விளக்கமாகும்.

B) (A) மற்றும் (R) இரண்டுமே சரி ஆனால் (R), (A)-யின் சரியான விளக்கம் இல்லை.

C) (A) சரி ஆனால் (R) சரியல்ல.

D) (A) சரியல்ல ஆனால் (R) சரி

விளக்கம் : விடை : (A)

அனுமானம் (A) விளக்கம்:

உள்ளடக்குதல் என்பது மாற்றுத்திறனாளிகள் அல்லது பின்தங்கிய சூழலில் உள்ள குழந்தைகள் உட்பட அனைத்து குழந்தைகளும் பாகுபாடின்றி பொதுவான கல்விச் சூழலில் இணைந்து கற்பதாகும். இது ஒவ்வொரு மனிதனுக்கும் இயல்பாகவே கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமை ஆகும். இது யாருக்கோ வழங்கப்படும் தனிப்பட்ட சலுகையோ அல்லது சிறப்புரிமையோ அல்ல. எனவே, இந்த வாக்கியம் சரி

காரணம் (R) விளக்கம்:

உள்ளடக்குதலின் முக்கிய நோக்கமே, வகுப்பறையில் உள்ள பல்வேறு திறமைகளும் பின்னணிகளும் கொண்ட மாணவர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு, அவர்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் கற்றல் சூழலை உருவாக்குவதாகும். எனவே, (A) மற்றும் (R) இரண்டுமே சரி (R), (A) –யின் சரியான விளக்கமாகும்.

23. **மணவிலக்கம் பெற்ற பெற்றோர்கள் பிறிதொரு துணையுடன் உடன் உறைவு முறையிலோ மறுமண முறையிலோ வாழத் தலைப்படும் போது, அவர்களின் குழந்தைகள் பின்வரும் எந்த குடும்பப் பாணிகளை ஏற்றுக் கொள்ள வேண்டி இருக்கும்?**
   a) கலப்புக் குடும்பம்
   b) நவீனக் குடும்பம்
   c) விரிவுக் குடும்பம்
   d) மறுகட்டமைப்புக் குடும்பம்

   சரியான விடையை தேர்ந்தெடுக்க:
   A) (a), (b), மற்றும் (c), மட்டும்
   B) (a), (c), மற்றும் (d), மட்டும்
   C) (a) மற்றும் (d) மட்டும்
   D) (b) மற்றும் (c), மட்டும்

விளக்கம் : விடை : (C)

மணவிலக்கம் (விவாகரத்து) பெற்ற பெற்றோர்கள், வேறொரு துணையுடன் சேர்ந்து வாழும் போதோ (Cohabitation) அல்லது மறுமணம் செய்யும் போதோ, அவர்களது குழந்தைகள் புதிய குடும்ப அமைப்பிற்குள் நுழைகிறார்கள். இந்த வகை குடும்பங்கள் சமூகவியலில் பின்வருமாறு அழைக்கப்படுகின்றன:

(a) கலப்புக் குடும்பம் (Blended Family): ஒரு தம்பதியினருக்கு முந்தைய உறவுகள் மூலம் பிறந்த குழந்தைகளும் இணைந்து வாழும் குடும்ப அமைப்பு.

(d) மறுகட்டமைப்புக் குடும்பம் (Reconstituted Family): பிரிந்த குடும்பங்கள் மீண்டும் ஒரு புதிய துணையுடன் மாற்றி அமைக்கப்படுவதைக் குறிக்கும் சொல்.

எனவே, (a) மற்றும் (d) ஆகிய இரு பெயர்களுமே இந்த வகையான குடும்ப அமைப்பைக் குறிக்கப் பயன்படுகின்றன.

24. **பொருத்துக:**

பட்டியல் – I	பட்டியல் – II
a) குறிப்பிட்ட கற்றல் குறைபாடு	1. தொடர்புகள் மற்றும் சமூக நடத்தைகளில் வரம்புகள்
b) ஆட்டிசம்	2. உடல் அசைவையும் தசை இயக்கங்களையும் பாதிக்கும் நாள்பட்ட நிலை

c) பெருமூளை வாதம்
3. ஒருவருடைய செயல், நடத்தை மற்றும் பணிகளைச் செய்தலானது அவரது வளர்ச்சிக்கு பொருத்தமாக ஒழுங்குப்படுத்த முடியாத கோளாறு

d) கவனக் குறைவு மிகை இயக்கக் கோளாறு
4. தனிநபருக்கு உள்ளார்ந்த கற்றல் மற்றும் அறிவு சார்ந்த கோளாறு

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	2	4	1	2
B)	4	3	2	1
C)	4	1	2	3
D)	3	1	4	2

விளக்கம் : விடை : (C)

குறிப்பிட்ட கற்றல் குறைபாடு – தனிநபருக்கு உள்ளார்ந்த கற்றல் மற்றும் அறிவு சார்ந்த கோளாறு

ஆட்டிசம் – தொடர்புகள் மற்றும் சமூக நடத்தைகளில் வரம்புகள்

பெருமூளை வாதம் – உடல் அசைவையும் தசை இயக்கங்களையும் பாதிக்கும் நாள்பட்ட நிலை

கவனக் குறைவு மிகை இயக்கக் கோளாறு – ஒருவருடைய செயல், நடத்தை மற்றும் பணிகளைச் செய்தலானது அவரது வளர்ச்சிக்கு பொருத்தமாக ஒழுங்குப்படுத்த முடியாத கோளாறு

25. பொருத்துக:

பட்டியல் – I	பட்டியல் – II
a) கற்பவர் சார்ந்த காரணி	1. கற்றல் அனுபவம்
b) ஆசிரியர் சார்ந்த காரணி	2. கற்றல் சூழல் மற்றும் வளம்
c) பாடம் சார்ந்த காரணி	3. அடைவு ஊக்கம்
d) செயல்பாடு சார்ந்த காரணி	4. ஆளுமைக் கூறுகள் மற்றும் நடத்தை

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	2	1	4	3
B)	4	3	1	2
C)	2	4	1	3
D)	3	4	1	2

விளக்கம் : விடை : (D)

கற்பவர் சார்ந்த காரணி – அடைவு ஊக்கம்

ஆசிரியர் சார்ந்த காரணி – ஆளுமைக் கூறுகள் மற்றும் நடத்தை

பாடம் சார்ந்த காரணி – கற்றல் அனுபவம்

செயல்பாடு சார்ந்த காரணி – கற்றல் சூழல் மற்றும் வளம்

26. கொடுக்கப்பட்டுள்ளவற்றில் பள்ளி சமுதாய உறவை மேம்படுத்துவது எது?

A) ஆசிரியர்கள் கூட்டங்கள்
B) பள்ளி மேலாண்மை குழுக்கள்
C) மாணவர் நல குழுக்கள்
D) பெற்றோர் ஆசிரியர் அமைப்புகள்

விளக்கம் : விடை : (A B C)

பெற்றோர் ஆசிரியர் அமைப்புகள் (PTA):

இது பள்ளி மற்றும் சமுதாயத்திற்கு இடையே உள்ள மிக முக்கியமான பாலமாகும். பெற்றோர்கள் சமுதாயத்தின் பிரதிநிதிகளாக இருப்பதால், இந்த அமைப்பு பள்ளிக்கும் சமுதாயத்திற்கும் இடையிலான நேரடியான உறவை மேம்படுத்துகிறது.

27. உறுதிப்படுத்துதல் (A) : கற்பித்தல் இயந்திரம் முக்கியமான ஒரு தொழில்நுட்ப கருவி, அதன் மூலம் எளிமையாக தொடர்ந்து வலுவூட்டுவதால் விரும்பத்தக்க நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

காரணம் (R) : தொடர்ச்சியான வலுவூட்டுதல் மூலம் நடத்தையை வடிவமைக்க முடியும், அதை மனித ஆசிரியர் மூலம் ஏற்படுத்தலாம்.

A) (A), (R) ஆகிய இரண்டுமே சரியானவை. அதோடு (R) என்பது (A)-க்கு பொருத்தமான விளக்கம் ஆகும்.
B) (A), (R) ஆகிய இரண்டுமே சரியானவை. அதோடு (R) என்பது (A)-க்கான பொருத்தமான விளக்கம் இல்லை.
C) (A) என்பது சரி, ஆனால் (R) என்பது தவறு.
D) (A) என்பது தவறு, ஆனால் (R) என்பது சரி.

விளக்கம் : விடை : (C)

உறுதிப்படுத்துதல் (A) –சரி:

'கற்பித்தல் இயந்திரம்' பி. எஃப். ஸ்கின்னர் கோட்பாட்டின் (Operant Conditioning) அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு முக்கியமான தொழில்நுட்பக் கருவியாகும்.

இது மாணவர்களின் ஒவ்வொரு சரியான பதிலுக்கும் உடனுக்குடன் தொடர்ச்சியான வலுவூட்டலை (Continuous reinforcement) வழங்கி, கற்றலில் விரும்பத்தக்க நடத்தை மாற்றத்தை வெற்றிகரமாக ஏற்படுத்துகிறது. எனவே இக்கூற்று சரியானது.

காரணம் (R) – தவறு :

தொடர்ச்சியான வலுவூட்டல் மூலம் நடத்தையை வடிவமைக்க முடியும் என்பது உண்மைதான். ஆனால், ஒரு சாதாரண வகுப்பறையில் இருக்கும் அனைத்து மாணவர்களுக்கும் ஒரே நேரத்தில் ஒரு மனித ஆசிரியரால் உடனுக்குடனும் தொடர்ச்சியாகவும் வலுவூட்டல் வழங்குவது நடைமுறையில் சாத்தியமற்றது. ஆசிரியரால் செய்ய முடியாத இந்தத் தொடர் வலுவூட்டல் பணியைச் செய்வதற்கே 'கற்பித்தல் இயந்திரம்' போன்ற தொழில்நுட்பங்கள் தேவைப்படுகின்றன. எனவே, இதை ஆசிரியர் மூலம் எளிதாக ஏற்படுத்தலாம் என்று கூறுவது தவறானது.

28. **"ஒரு ஆசிரியர் தொடர்ந்து அவராகவே கற்காவிட்டல், அவரால் உண்மையாக கற்பிக்க முடியாது. ஒரு விளக்கு தொடர்ந்து ஒளிராவிட்டால் வேறு ஒரு விளக்கை ஒளிர வைக்க முடியாது" என்று கூறியவர் யார்?**

A) சுவாமி விவேகானந்தர் B) மகாத்மா காந்திஜி
C) இரவீந்திரநாத் தாகூர் D) Dr. இராதா கிருஷ்ணன்

விளக்கம் : விடை : (C)

"ஒரு ஆசிரியர் தொடர்ந்து அவராகவே கற்காவிட்டால், அவரால் உண்மையாக கற்பிக்க முடியாது. ஒரு விளக்கு தொடர்ந்து ஒளிராவிட்டால் வேறு ஒரு விளக்கை ஒளிர வைக்க முடியாது.இந்த உலகப் புகழ்பெற்ற கல்விச் சிந்தனையை வழங்கியவர் நோபல் பரிசு பெற்ற சிறந்த கவிஞரும் கல்வியாளருமான இரவீந்திரநாத் தாகூர் ஆவார்.

29. **பின்வரும் கொள்கைகள் மற்றும் சட்டங்களை காலவரிசைப்படி ஒழுங்குபடுத்துக.**

a) குழந்தைகள் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்
b) தேசியக் கல்விக் கொள்கை
c) தேசிய அறிவு ஆணையம்
d) தேசிய ஆசிரியர்கள் ஆணையம்

சரியான விடையை தேர்ந்தெடுக்க:

A) (b), (d), (c), (a)
B) (d), (c), (a), (b)
C) (d), (b), (c), (a)
D) (b), (a), (c), (d)

விளக்கம் : விடை : (*)

தேசியக் கல்விக் கொள்கை

இந்தியாவின் முதலாவது தேசியக் கல்விக் கொள்கை 1968–இல் இந்திரா காந்தி அம்மையார் காலத்தில் கொண்டு வரப்பட்டது. பின்னர் அடுத்தடுத்த கொள்கைகள் 1986 மற்றும் 2020–இல் அறிமுகப்படுத்தப்பட்டன.

தேசிய ஆசிரியர்கள் ஆணையம்

பேராசிரியர் டி.பி. சட்டோபாத்யாயா தலைமையில் ஆசிரியர்களின் கல்வித்தகுதி, பணிச்சூழல் மற்றும் சமூக அந்தஸ்தை மேம்படுத்த இந்த ஆணையம் 1983-இல் அமைக்கப்பட்டது.

தேசிய அறிவு ஆணையம்

2005 ஆம் ஆண்டு சாம் பிட்ரோடா தலைமையில் இந்தியாவின் கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத் துறைகளை 21-ஆம் நூற்றாண்டிற்கு ஏற்ப மாற்றியமைக்க இந்த உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது.

குழந்தைகள் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்

இந்தியாவில் 6 முதல் 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை அடிப்படை உரிமையாக்கும் இந்தச் சட்டம் 2009-இல் இயற்றப்பட்டு, ஏப்ரல் 1, 2010 முதல் நடைமுறைக்கு வந்தது.

30. கல்வி பயன்பாட்டிற்கான தொழில் நுட்பத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான கொள்கைகளில் பின்வருவன எவை?

a) பொருத்தத்தன்மை b) நம்பகத்தன்மை
c) தகவல் d) ஆர்வம்

சரியான விடையை தேர்ந்தெடுக்க:

A) (a), (b), மற்றும் (d), மட்டும்
B) (a), (c), மற்றும் (d), மட்டும்
C) (b), (c), மற்றும் (d), மட்டும்
D) (a), (b), மற்றும் (c), மட்டும்

விளக்கம் : **விடை : (A)**

கல்வித் தொழில்நுட்பத்தை (Educational Technology) தேர்வு செய்யும்போது, அது கற்றலாளர்களின் தேவைகளுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். மேலும், அதில் வழங்கப்படும் உள்ளடக்கம் நம்பகமானதாக இருக்க வேண்டும்; அதேசமயம், மாணவர்களிடம் ஆர்வத்தையும் கற்றல் ஊக்கத்தையும் உருவாக்கும் திறனும் இருக்க வேண்டும். தேர்வு செய்யப்படும் தொழில்நுட்பம், கற்பித்தல் நோக்கங்களை அடைய உதவுவதோடு, மாணவர்களின் அர்த்தமுள்ள கற்றலை மேம்படுத்தவும் வேண்டும். தகவல் (Information) என்பது தொழில்நுட்பத்தின் மூலம் வழங்கப்படும் கற்றல் உள்ளடக்கம் மட்டுமே; அது கல்வித் தொழில்நுட்பத்தைத் தேர்வு செய்வதற்கான ஒரு அடிப்படைக் கொள்கை அல்ல.

PART - II தமிழ்

31. கடல் என்பது ..... சீர்.

A) நேரசை B) மூவசை
C) நிரையசை D) நாலசை

விளக்கம்: **விடை: (C)**

நேரசை

குறில் தனித்தும், குறில் ஒற்றடுத்தும், நெடில் தனித்தும், நெடில் ஒற்றடுத்தும் வருவது நேரசையாகும்.

நிரையசை

இருகுறில் இணைந்தும், இருகுறில் இணைந்து ஒற்றடுத்தும், குறில்நெடில் இணைந்தும், குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்தும் வருவன நிரையசைகள்.

கடல் என்ற சொல்லில் இரு குறில் இணைந்து ஒற்றடுத்துள்ளது. எனவே இச்சொல் நிரையசை ஆகும்.

மூவசைச்சீர்

மூன்று அசைகள் சேர்ந்து ஒரு சீராக அமைவது "மூவசைச்சீர்' எனப்படும். இதில் நேரில் முடிவது காய்ச்சீர் என்றும், நிரையில் முடிவது கனிச்சீர் என்றும் அழைக்கப்படும்.

நாலசைச்சீர்

நான்கு அசைகள் இணைந்து உருவாகும் சீர்கள் நாலசைச்சீர் எனப்படும்.

32. ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் கால அளவிற்கான மாத்திரை என்ன ?

A) 1 B) 2
C) ½ D) 3

விளக்கம்: **விடை: (C)**

எழுத்துகளின் ஒலி அளவு குறித்ததே மாத்திரை. 'மாத்திரை' என்ற ஒலி அளவு யாதெனின் கண் இமைக்கும் நேரம் அல்லது 'கைநொடி நேரம் என்பர் இலக்கண நூலார். எழுத்துகளின் மாத்திரை இரண்டிற்கு மேல் இல்லை என்பது இலக்கண நூலார் கருத்து; அதற்கு மேலும் மாத்திரை பெற வேண்டுமெனில் அது அளபெடையாகச் செய்யுளில் வரும்; அல்லது இசையில் வரும்.

எழுத்துகள்	மாத்திரை அளவு
குறில்	1
நெடில்	2
மெய் எழுத்துகள்	1/2
ஆய்த எழுத்துக்கள்	**1/2**
மகரக்குறுக்கம், ஆய்தக் குறுக்கம்	1/4
குற்றியலிகரம், குற்றியலுகரம்	1/2
ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம்	1
உயிரளபெடை	3
ஒற்றளபெடை	1

33. பொருத்துக:

a) ஈரறிவு i) பறவை, விலங்கு
b) ஓரறிவு ii) கரையான்,எறும்பு
c) மூவறிவு iii) சிப்பி, நத்தை
d) ஐந்தறிவு iv) புல்,மரம்

A) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)
B) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)
C) (a)-(i), (b)-(ii), (c)-(iv), (d)-(iii)
D) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

விளக்கம்: **விடை: (B)**

அறிவு நிலை	அறியும் ஆற்றல்	எடுத்துக்காட்டு
ஓரறிவு	உற்றறிதல் (தொடுதல் உணர்வு)	புல், மரம்
ஈரறிவு	உற்றறிதல், சுவைத்தல்	சிப்பி, நத்தை
மூவறிவு	உற்றறிதல், சுவைத்தல், நுகர்தல்	கரையான், எறும்பு
நான்கறிவு	உற்றறிதல், சுவைத்தல், நுகர்தல், காணல்	நண்டு, தும்பி
ஐந்தறிவு	உற்றறிதல், சுவைத்தல், நுகர்தல், காணல், கேட்டல்	பறவை,விலங்கு
ஆறறிவு	உற்றறிதல், சுவைத்தல், நுகர்தல், காணல், கேட்டல், பகுத்தறிதல் (மனம்)	மனிதன்

34. வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று:

A) ஏவல் வினைமுற்று
B) குறிப்பு வினைமுற்று
C) தெரிநிலை வினைமுற்று
D) வியங்கோள் வினைமுற்று

விளக்கம்: விடை: (D)

வியங்கோள் வினைமுற்று

க, இய, இயர் என்ற விகுதிகளில் ஒன்றைப் பெற்றுவரும். வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் என்ற நான்கு பொருளில் வரும்.

(எ.கா)– வாழ்க, வாழிய, வாழியர்.

தெரிநிலை வினைமுற்று

திணை, பால், காலம் போன்றவற்றை வெளிப்படையாகக் காட்டி சொல் முடிவது தெரிநிலை வினைமுற்றாகும். இது செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகியவற்றை வெளிப்படுத்தும்.

(எ.கா) :– ஓவியன் சித்திரம் தீட்டினான்

செய்பவன் – ஓவியன்
நிலம் – சுவர் அல்லது திரைச்சீலை
செய்பொருள் – சித்திரம்
திணை – உயர்திணை,
கருவி – தூரிகை, வண்ணம்
செயல் – தீட்டினான்
காலம் – இறந்தகாலம்
பால் – ஆண்பால்

குறிப்பு வினைமுற்று

திணை, பால் போன்றவற்றை வெளிப்படையாகக் காட்டி காலத்தை மட்டும் குறிப்பால் உணர்த்துவது குறிப்பு வினைமுற்றாகும்.

(எ.கா):– அவன் நல்லன், அவன் இன்சொல்லன்

இது பொருள் முதல் ஆறனையும் அடிப்படையாகக் கொண்டு, செய்பவன் முதலான ஆறனுள் கருத்தா ஒன்றனை மட்டும் தெரிவித்துக் காலத்தைக் குறிப்பாகக் காட்டும்.

ஏவல் வினைமுற்று

முன்னிலையில் உள்ள ஒருவரை அல்லது ஒன்றனை ஆணையிட்டு ஏவும் வினைக்கு ஏவல் வினைமுற்று என்று பெயர்.

எ.கா – நீ படி, நீர் வாரீர்

35. 'உயிர்மெய் நெடில்' எழுத்துக்கள் மொத்தம்

A) 126 B) 132
C) 90 D) 12

விளக்கம்: விடை: (A)

உயிர் எழுத்துகள்	– 12
மெய் எழுத்துக்கள்	– 18
ஆய்த எழுத்து	– 1
உயர் மெய் எழுத்துக்கள்	– 216
உயிர்மெய் குறில்	– 90
உயிர்மெய் நெடில்	**– 126**

36. எட்டுப் பொருளில் வரும் இடைச்சொல்

A) ஆ B) மட்டும்
C) தான் D) ஓ

விளக்கம்: விடை: (D)

ஓ – ஒகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு (உயர்வு, இழிவு), எதிர்மறை, தெரிநிலை, கழிவு, பிரிநிலை, அசைநிலை, ஆகிய எட்டுப் பொருள்களில் வரும்.

தற்காலத்தில் ஒகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாகவும், ஐயம், உறுதியாகக் கூறாமுடியாமை, மிகை, இது அல்லது அது, இதுவும் இல்லை–அதுவும் இல்லை போன்ற பொருள்களிலும் வருகின்றன.

(எ.கா) இன்றைக்கு மழைபெய்யுமோ? (ஐயம்)
பூங்கொடியோ மலர்க்கொடியோ (இது அல்லது அது)
ஆ – வினாப் பொருளில் வரும் இடைச்சொல்லாகும்.
(எ.கா) – புகழேந்தி உன்னிடம் பேசினானா?
புகழேந்தி நேற்று உன்னுடனா பேசினான்?
மட்டும் –இச்சொல் வரையறைப் பொருளைத் தருகிறது. முடிந்தவரை, குறிப்பிட்ட நேரம் வரை என்ற பொருள்களிலும் வருகிறது.
(எ.கா) படிப்பு மட்டும் இருந்தால் போதும்.
தான் – 'தான்' என்னும் இடைச்சொல் அழுத்தப் பொருளில் மட்டும் வருகிறது. சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ அதனை முதன்மைப் படுத்துகிறது. ஒரு சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே அமைகிறது.

நிர்மலாதான் நேற்று விழாவில் பாடினாள்
நிர்மலா நேற்றுதான் விழாவில் பாடினாள்
நிர்மலா நேற்று விழாவில்தான் பாடினாள்
நிர்மலா நேற்று விழாவில் பாடினாள்தான்
நிர்மலாதான் பாடினாள்–'தான்' என்பது இடைச்சொல் குழு
நிர்மலாதானும் பாடினாள் – தான் என்பது தற்கட்டுப் படர்க்கை ஒருமை இடப்பெயர்.

37. ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய ஆறு வகையான பொருள்களில் வருவது

A) மூன்றாம் வேற்றுமை B) இரண்டாம் வேற்றுமை
C) நான்காம் வேற்றுமை D) ஐந்தாம் வேற்றுமை

விளக்கம்: விடை: (B)

இரண்டாம் வேற்றுமை

இவ்வேற்றுமையின் உருபு 'ஐ' என்பதாகும். இதனை செயப்படுபொருள் வேற்றுமை என்றும் கூறுவர். 'கயல்விழி புத்தகத்தைப் படித்தாள்' என்ற தொடரில் 'புத்தகம்' என்ற பெயர்ச்சொல் 'ஐ' என்ற வேற்றுமை உருபினை ஏற்று புத்தகத்தை' என்று செயப்படுபொருளாக மாறி நிற்பதால் செயப்படுபொருள் வேற்றுமை என வழங்கப்படுகிறது. இவ்வேற்றுமை ஆறு பொருள்களில் அமையும்.

கல்லூரியை நிறுவினான்	ஆக்கல்
மூட நம்பிக்கைகளை ஒழித்தான்	அழித்தல்
வெற்றியை அடைந்தான்	அடைதல்
குடியை விட்டான்	நீத்தல்
கொடியைப் போன்றவள்	ஒத்தல்
பண்பை உடையவன்	உடைமை

மூன்றாம் வேற்றுமை

இவ்வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஓடு, ஒடு, உடன் முதலியன. கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி முதலிய மூன்று பொருள்களில் இவ்வேற்றுமை அமையும்.

நான்காம் வேற்றுமை

இவ்வேற்றுமையின் உருபு 'கு' என்பதாகும். இவ்வேற்றுமை ஏழு பொருள்களில் அமையும். கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை.

ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமை உருபு 'இல்', 'இன்' என்பன. இவ்வேற்றுமை நான்கு பொருள்களில் அமையும். அவை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது (காரணம்) முதலியனவாகும்.

38. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! என்னும் அடியில் 'கொடுத்தோர்' என்னும் சொல்லுக்கான இலக்கணக் குறிப்பினைத் தேர்க.

A) தொழிற்பெயர்
B) வினையாலணையும் பெயர்
C) வியங்கோள் வினைமுற்று
D) உரிச்சொல் தொடர்

விளக்கம்: **விடை: (B)**

வினையாலணையும் பெயர்

ஒரு வினைமுற்றுச் சொல் தன்னுடைய வினைமுற்றுப் பொருளைக் காட்டாமல், அவ்வினையைச் செய்த கருத்தாவைக் குறிக்குமானால் அது வினையாலணையும் பெயராகும்.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! என்னும் அடியில் 'கொடுத்தோர் என்ற சொல் கொடுத்தல் என்ற செயலை மட்டும் குறிக்காமல், உணவை அளித்த மக்களை குறிக்கிறது. எனவே, இது வினையாலணையும் பெயர் ஆகும்.

தொழிற்பெயர்

ஒரு தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும். இது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் காட்டாது.

(எ.கா) உண்ணல், உறங்கல், ஓடுதல்

தொழிற்பெயர்கள் படர்க்கை இடத்தில் மட்டுமே அமையும்.

தொழிற்பெயர் விகுதிகள்: தல், அல், அம், ஐ, கை, வை, கு,பு,உ,தி,சி,வி,உள்,காடு, பாடு, அரவு, ஆனை, மை, து என்ற 19 விகுதிகளும் பிறவுமாம்.

வினைமுற்றுச் சொற்களோடு மேற்கண்ட விகுதிகளைச் சேர்த்தால் தொழிற்பெயராகும். எ.கா: கூறுதல் – கூறு + தல், பாடல் – பாடு + அல்

வியங்கோள் வினைமுற்று

க, இய, இயர் என்ற விகுதிகளில் ஒன்றைப் பெற்றுவரும். வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் என்ற நான்கு பொருளில் வரும்.

(எ.கா)– வாழ்க, வாழிய, வாழியர்.

உரிச்சொற்றொடர்

உரிச்சொல்லைத் தொடர்ந்து வேறு சொல் வரும் பொழுது அஃது உரிச்சொற்றொடர் ஆகும்.

(எ.கா) மாமுனிவர் மா (உரிச்சொல்)

சாலச்சிறந்தது சால (உரிச்சொல்)

கடிமணம் கடி (உரிச்சொல்)

39. நீள் + உழைப்பு' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்:

A) நீள்ளுழைப்பு B) நீளுஉழைப்பு
C) நீண்டுழைப்பு D) நீளுழைப்பு

விளக்கம்: **விடை: (D)**

நீள் + உழைப்பு = நீளுழைப்பு

இலக்கண விதிகளின் படி உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி , ள் + உ = ளு (நீளுழைப்பு) என்றானது.

40. 'பிழைத்த வேல்' – இது எவ்வகைத் தொடர் என்பதைக் குறிப்பிடுக.

A) பெயரெச்சத் தொடர் B) அடுக்குத் தொடர்
C) உரிச்சொல் தொடர் D) வினையெச்சத் தொடர்

விளக்கம்: **விடை: (A)**

பெயரெச்சத் தொடர்

பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும் எச்சவினை பெயரெச்சத் தொடராகும்.

(எ.கா) – பிழைத்த வேல், விழுந்த மரம், கேட்ட பாடல்

அடுக்குத்தொடர்

பொருள் உடைய ஒரே சொல் மீண்டும் மீண்டும் அடுக்கி வருதல் அடுக்குத் தொடர் எனப்படும்.

(எ.கா) – நன்று நன்று; ஓடு ஓடு ; வாழ்க வாழ்க; பிடி பிடி

உரிச்சொல் தொடர்

உரிச்சொல்லைத் தொடர்ந்து வேறு சொல் வரும் பொழுது அஃது உரிச்சொற்றொடர் ஆகும். (எ.கா) மாமுனிவர், சாலச்சிறந்தது

வினையெச்சத் தொடர்

வினைமுற்றைக் கொண்டு முடியும் எச்சவினை வினையெச்சத் தொடராகும்.

(எ.கா) – வந்து சென்றான், பாடி மகிழ்ந்தனர்.

41. 'பகைவனென்றாலும்'–என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது

A) பகைவன் + என்று + ஆலும்
B) பகைவன் + என்றாலும்
C) பகை + அன் + என் + ஆலும்
D) பகை +என்று+ஆலும்

விளக்கம்: **விடை: (B)**

'பகைவனென்றாலும்' – பகைவன் + என்றாலும்

42. மொழிக்கு முதலில் வராத எழுத்துக்கள்:

A) மெய்யெழுத்துக்கள் பதினெட்டு
B) மெய்யெழுத்துக்கள் பதினேழு
C) மெய்யெழுத்துக்கள் பதினாறு
D) மெய்யெழுத்துக்கள் பதினான்கு

விளக்கம்: **விடை: (A)**

மொழி முதல் எழுத்துகள்:

1. உயிரெழுத்துகள் பன்னிரெண்டும் சொல்லின் முதலில் வரும்.

2. **மெய்யெழுத்துகள் பதினெட்டும் தனிமெய் வடிவில் சொல்லுக்கு முதலில் வருவதில்லை. அவை உயிரெழுத்துகளோடு சேர்ந்து உயிர்மெய் வடிவிலேயே மொழிக்கு முதலில் வருகின்றன.**

3. க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ என்னும் பத்து வரிசைகள் உயிர்மெய் வடிவங்களாகச் சொல்லின் முதலில் வரும். (ங வரிசையில் 'ங' மட்டுமே சொல்லின் முதலில் வரும்).

4. ட, ண, ர, ல, ழ, ள, ற, ன என்னும் எட்டு வரிசைகள் சொல்லின் முதலில் வருவதில்லை.

5.ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.

43. 'குவிமொட்டு' –இலக்கணக் குறிப்புத் தருக.

A) பண்புத் தொகை B) வினைத் தொகை
C) அன்மொழித் தொகை D) உவமைத் தொகை

விளக்கம்: **விடை: (B)**

வினைத்தொகை

"காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை" – நன்னூல் 364.

'கரந்த' என்றால் 'மறைந்துவருவது' என்று பொருளாகும். வினைத்தொகை என்பது ஒரு வினைச்சொல்லும் ஒரு பெயர்ச்சொல்லும் இணைந்த கூட்டுச்சொல்லாகும். இதில் முதல்சொல் வினைச் சொல்லாகவும் இரண்டாவது சொல் பெயர்ச்சொல்லாகவும் இருக்கும்.

முதலாவது வரும் வினைச் சொல்லானது மூன்று காலத்தையும் குறிப்பால் உணர்த்தும் சொல்லாக அமையும்.

எ.கா.

வினைத்தொகை	இறந்த காலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
குவிமொட்டு	குவிந்த மொட்டு	குவிகின்ற மொட்டு	குவியும் மொட்டு
ஊறுகாய்	ஊறிய காய்	ஊறுகின்ற காய்	ஊறும் காய்

பண்புத்தொகை

சொற்றொடரில் பெயர்ச்சொல்லுக்கு இடையே 'ஆகிய' 'ஆன' என்கிற பண்புருபுகள் மறைந்து வரும் சொற்களைப் பிரிக்கும்பொழுது நிலைமொழி ஈற்றில் 'மை' விகுதி பெற்று வரும்.

எ.கா :

செந்தாமரை – செம்மை + தாமரை (செம்மையாகிய தாமரை)

கடுங்கதிர் – கடுமை + கதிர் (கடுமையாகிய கதிர்)

மூதூர் – முதுமை + ஊர் (முதுமையாகிய ஊர்)

இன்சொல் – இனிமை + சொல் (இனிமையாகிய சொல்)

உவமைத்தொகை

ஒரு பொருளை சிறப்பித்துக் கூறுவதற்கு அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளை சேர்த்துக் கூறும் பொழுது 'போல, போன்ற' 'புரைய, ஒப்ப ஆகிய உவம உருபுகள் மறைந்து வந்தால் அது உவமைத்தொகை எனப்படும்.

(எ.கா)– மதிமுகம் – மதி போன்ற முகம் ; மலர் அடி – மலர் போன்ற அடி

அன்மொழித் தொகை

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகைகளை அடுத்து ஒரு சொல் தொடர்ந்து வருவது அன்மொழித் தொகை எனப்படும்.

(எ.கா) பொற்கொடி நடந்தாள் – பொன்னால் ஆகிய கொடியின் தன்மை கொண்ட பெண் நடந்தாள்.

தேன்மொழி நகைத்தாள் – தேன் போன்ற மொழியை உடையாள் நகைத்தாள்.

44. வல்லினம் மிகும் இடங்களில் ஒன்று

A) உவமைத் தொகை B) வினைத் தொகை

C) உம்மைத் தொகை D) பெயரெச்சம்

விளக்கம்: **விடை: (A)**

வல்லினம் மிகும் இடங்கள்

1. அ, இ என்னும் சுட்டெழுத்துக்களுக்குப் பின்னும், அந்த, இந்த என்னும் சுட்டுத் திரிபுகளின் பின்னும், எ என்னும் வினாவெழுத்தின் பின்னும், எந்த என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும். எ.கா இந்தக்காலம், அச்சட்டை, எத்திசை
2. ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். எ.கா கதவைத்திற
3. கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். எ.கா மெட்டுக்குப்பாட்டு
4. என, ஆக போன்ற சொல்லுருபுகளின்பின் வல்லினம் மிகும். எ.கா எனக்கேட்டார்
5. அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும். எ.கா இதற்குக் கொடு, அதற்குச் சொன்னேன்
6. இனி, தனி ஆகிய சொற்களின்பின் வல்லினம் மிகும். எ.கா இனிக் காண்போம், தனிச் சிறப்பு
7. மிக என்னும் சொல்லின்பின் வல்லினம் மிகும். எ.கா மிகப் பெரியவர்
8. எட்டு, பத்து என்னும் எண்ணுப்பெயர்களின்பின் வல்லினம் மிகும். எ.கா எட்டுத்தொகை, பத்துப்பாட்டு
9. ஒரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும்.

எ.கா தீப் பிடித்தது

10. உவமைத்தொகையில் வல்லினம் மிகும். எ.கா – தாமரைப்பாதம்
11. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்பின் வல்லினம் மிகும். எ.கா ஓடாக் குதிரை
12. வன்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலை மொழியாக இருந்து புணர்கையில் வல்லினம் மிகும். எ.கா கேட்டுக் கொண்டான்
13. (அகர, இகர ஈற்று) வினையெச்சங்களுடன் புணர்கையில் வல்லினம் மிகும். எ.கா ஆடச் சொன்னார்
14. ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும். எ.கா புலித்தோல்
15. திசைப்பெயர்களின்பின் வலிமிகும். எ.கா கிழக்குப் பகுதி
16. இரு பெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும். எ.கா மல்லிகைப்பூ
17. சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களின்பின் வல்லினம் மிகும். எ.கா. தவச்சிறிது
18. தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகார எழுத்தின்பின் வல்லினம் மிகும். எ.கா நிலாச் சோறு, கனாக் கண்டேன்
19. சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும். எ.கா வாழ்க்கைப்படகு, உலகப்பந்து.

45. பொருத்துக:

a) புறா	i) குழறும்
b) கோழி	ii) கொக்கரிக்கும்
c) சேவல்	iii) குனுகும்
d) கூகை	iv) கூவும்

A) (a)-(iv), (b)-(ii), (c)-(iii), (d)-(i)

B) (a)-(iv), (b)-(ii), (c)-(i), (d)-(iii)

C) (a)-(iii), (b)-(ii), (c)-(iv), (d)-(i)

D) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

விளக்கம்: **விடை: (C)**

புறா – குனுகும்

கோழி – கொக்கரிக்கும்

சேவல் – கூவும்

கூகை – குழறும்

46. பகுபத உறுப்புகளில் அடங்காமல் ஏழாவது உறுப்பாக வரும் புறத்துறுப்பை எவ்வாறு அழைக்கலாம் ?

A) சாரியை B) விகாரம்

C) எழுத்துப் பேறு D) சந்தி

விளக்கம்: **விடை: (C)**

எழுத்துப்பேறு :

பகுபத உறுப்புகளுள் அடங்காமல் ஏழாவது உறுப்பாக அமைந்து பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப்பேறு. இது புறத்துறுப்பு எனப்படும்.

(எ.கா)

வந்தனன் – வா (வ) + த் (ந்) + அன் + அன்

வா – பகுதி 'வ' ஆனது விகாரம்

த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

அன் – சாரியை

அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

சாரியை :

பகுதியோடு இடைநிலையும், இடைநிலையோடு விகுதியும் பொருத்தமாகச் சார்ந்து இயைய வரும் உறுப்பு சாரியை ஆகும்.

சந்தி வரவேண்டிய இடத்தில் உயிர்மெய் எழுத்து வந்தால் அதனைச் சாரியை எனக் குறிப்பிட வேண்டும்.

(எ.கா) தருகுவென் – தா (தரு) + கு+வ்+என்.

இதில் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும் 'கு' சாரியை ஆகும்.

சாரியைக்குப் பொருள் இல்லை.

'அன் என்பது விகுதியாக வரும்போது 'அன்' என்பதே சாரியையாக வரும்.

சாரியைகள் – அன், ஆன், இன், இல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன்

விகாரம் :

பகுதி, விகுதி, இடைநிலை ஆகியன புணரும் போது அவற்றின் வடிவத்தில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும். இஃது ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் திரிந்தும் கெட்டும் நெடில் குறிலாகவும் மாற்றம் பெறும். இத்தகைய மாற்றமே விகாரம் எனப்படும்.

எ.கா :நின்றான் – நில்(ன்) + ற் +ஆன்.

'நில்' என்னும் பகுதியில் 'ல்' 'ன்' ஆகத் திரிந்தது விகாரம்

47. இரு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருள் தந்தால் அதனை ..... என்பர்.

A) பண்புத்தொகை B) வினைத்தொகை

C) வேற்றுமைத்தொகை D) உம்மைத்தொகை

விளக்கம்: **விடை: C)**

வேற்றுமைத்தொகை

இரண்டு சொற்களுக்கிடையே வேற்றுமை உருபுகள் மறைந்து வந்தால் அது வேற்றுமைத் தொகை எனப்படும். முதல் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை தவிர பிற ஆறு வேற்றுமைத் தொடர்களுக்கும் உருபு உண்டு.

	தொகை நிலைத் தொடர்	மறைந்த உருபு	தொகாநிலைத் தொடர்
2 –ஆம் வேற்றுமை	மொழி கற்றான்	ஐ	மொழியைக் கற்றான்
3 –ஆம் வேற்றுமை	தலை வணங்கினான்	ஆல்	தலையால் வணங்கினான்
4– ஆம் வேற்றுமை	கல்லூரி சென்றாள்	கு	கல்லூரிக்குச் சென்றாள்
5– ஆம் வேற்றுமை	கண் கடைப்பார்வை, மலையருவி	இன் / இல்	கண்ணின் கடைப்பார்வை / மலையில் அருவி
6– ஆம் வேற்றுமை	கண்பார்வை	அது	கண்ணினது பார்வை
7 – ஆம் வேற்றுமை	பாற்சுவை	கண்	பாலின்கண் சுவை

48. கீழ்க்கண்டவற்றுள் காரணச் சிறப்புப் பெயர் எது ?

A) பறவை B) மண்

C) மரம் D) மரங்கொத்தி

விளக்கம்: **விடை: (D)**

காரணப்பெயர்

ஏதேனும் ஒரு காரணம் பற்றியோ அல்லது பல காரணங்கள் பற்றியோ வழங்கி வரும் பெயர் காரணப்பெயர் எனப்படும்.

சான்று:

முக்காலி – மூன்று கால்கள் இருப்பதால் 'முக்காலி' என வழங்கப்படுகிறது.

காரணச் சிறப்புப்பெயர்

மரங்கொத்தி என்பது காரணச் சிறப்புப் பெயராகும். பறவைகள் பல இருந்தாலும், மரத்தைக் கொத்தும் ஒரு குறிப்பிட்ட பறவை இனத்தை மட்டுமே குறிக்கிறது. எனவே இது காரணச்சிறப்புப் பெயராகும். (எ.கா) மோதிரம், கபிலர், வளையல்

காரணப் பொதுப்பெயர்

பறப்பதனால் 'பறவை' எனக் காரணம் கருதி வழங்கும் பெயராயிற்று. காகம், குயில், புறா, கிளி ஆகிய அனைத்தையும் பறவை என்னும் பொதுச்சொல்லால் அழைக்கிறோம். அதனால், இதனைக் 'காரணப்பொதுப்பெயர்' என்கிறோம்.

(எ.கா) பறவை, அணிகலன், புலவன்

49. செற்றவர் என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு யாது ?

A) வினைமுற்று B) வினையாலணையும் பெயர்

C) தொழிற்பெயர் D) பெயர்ச்சொல்

விளக்கம்: **விடை: (B)**

வினையாலணையும் பெயர்

ஒரு வினைமுற்றுச் சொல் தன்னுடைய வினைமுற்றுப் பொருளைக் காட்டாமல், அவ்வினையைச் செய்த கருத்தாவைக் குறிக்குமானால் அது வினையாலணையும் பெயராகும்.

(எ.கா) :– செற்றவர், பொறுத்தார், அகழ்வார், இகழ்வார்

வினைமுற்று

பெயர்ச்சொல்லுக்குத் துணையாக நின்று வாக்கியத்தின் பொருளை முடித்துக்காட்ட வருவது வினைமுற்றாகும்.

(எ.கா):– மரம் வீழ்ந்தது, பாண்டியன் படையெடுத்தான், மாடுகள் சென்றன.

இத்தொடர்களில் வீழ்ந்தது, படையெடுத்தான், சென்றன ஆகிய சொற்கள் வினைமுற்றாகும்.

பெயர்ச்சொல்

இடுகுறியாகவோ, காரணம் கருதியோ ஒன்றன் பெயராய் அமைந்த சொல் பெயர்ச்சொல் எனப்படும். பெயர்ச்சொல்லின் வகைகள்: பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர்

தொழிற்பெயர்

ஒரு தொழிலைக் குறிக்கும் பெயர் 'தொழிற்பெயர்' எனப்படும். இது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் காட்டாது.

(எ.கா) உண்ணல், ஓடுதல், ஆடுதல்,

50. உவமையை மட்டும் கூறி, அதன் மூலம் கூற வந்த கருத்தை உணர வைப்பது ..... அணி ஆகும்.

A) வேற்றுமை அணி

B) பிறிதுமொழிதல்

C) எடுத்துக்காட்டு உவமை அணி

D) இயல்புநவிற்சி அணி

விளக்கம்: **விடை: (B)**

பிறிதுமொழிதல் அணி :

புலவன் தான் கருதிய பொருளை அப்படியே கூறாமல் அதை விளக்குவதற்கு அதைப் போன்ற பிறிதொன்றினைக் கூறி விளக்குவதற்குப் பிறிதுமொழிதல் அணி அல்லது ஒட்டணி என்று பெயர்.

எ.கா

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்

சால மிகுத்துப் பெயின்.

மென்மையாக இருக்கும் மயிலிறகையும் அளவாக வண்டியில் ஏற்ற வேண்டும். விஞ்சினால் வண்டியின் அச்சு முறியும். இது கூறப்பட்ட கருத்து.

எந்தச் செயலையும் அளவாகச் செய்ய வேண்டும்; அளவுக்கு மீறினால் அழிவு நேரிடும். –இது விளக்க வந்த கருத்து

வேற்றுமை அணி :

ஏதேனும் ஓர் ஒற்றுமையுடைய இரு பொருள்களுக்கிடையே வேற்றுமை கற்பித்துக் கூறல் வேற்றுமை அணி ஆகும்.

(எ.கா)

மோப்பக் குழையும் அனிச்சம், முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து.

ஒற்றுமை : அனிச்ச மலர் மென்மையானது. விருந்தினர் மென்மையான தன்மையுடையவர்.

வேற்றுமை : அனிச்ச மலரை நுகர்ந்து பார்த்தால்தான் வாடும். ஆனால் முகம் மாறுபட்டு பார்த்தாலே விருந்தினர் வாடிவிடுவர்.

எடுத்துக்காட்டு உவமையணி :

உவமை தனிவாக்கியமாகவும் உவமேயம் தனிவாக்கியமாகவும் இருந்து, உவம உருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.

(எ.கா):

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு

தொட்டனைத் தூறும் மணற்கேணி – உவமை

கற்றனைத் தூறும் அறிவு – உவமேயம்

இவ்விரண்டிற்கும் இடையில் 'போல' என்னும் உவம உருபு மறைந்து வந்து பொருள் தருகிறது.

இயல்பு நவிற்சி அணி

உள்ளதை உள்ளவாறு இயற்கைத் தன்மை மாறாமல் கூறுவது இயல்பு நவிற்சி அணி ஆகும்.

(எ. கா):

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு

ஒரு காலத்தில் தமது துன்பத்தைப் போக்கியவரின் நட்பை ஏழு பிறப்பிலும் ஆன்றோர் நினைத்துக் கொண்டே இருப்பர்.

51. கீழ்க்காணும் சொற்றொடரில் தனிச் சொற்றொடர் எது ?

A) மழை கொட்டிக் கொண்டிருந்தாலும் பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தான்

B) அழைப்பு மணி ஒலித்ததால் கயல்விழி கதவைத் திறந்தார்

C) கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதி யாயினர்

D) மேரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர்

விளக்கம் : **விடை: (D)**

ஒரு எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டு முடிவது **தனிச் சொற்றொடர்** எனப்படும். இதில் எச்ச வினைகள் (முற்றுப் பெறாத வினைகள்) இருக்காது; ஒரே ஒரு முதன்மைச் செய்தி மட்டுமே இருக்கும். எ.கா : **மேரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர்.**

52. பொன்னகர் – இலக்கணக் குறிப்பு தருக.

A) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

B) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

C) பண்புத் தொகை

D) உவமைத் தொகை

விளக்கம் : **விடை: (A)**

ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து வருவது உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆகும்.

(எ.கா). பொன்னகர்

இது பொன்னை உடைய நகர் என விரிந்து பொருள் தருகிறது.

பொன், நகர் என்னும் இரு சொற்களுக்கு இடையில் 'ஐ' என்னும் வேற்றுமை உருபும் 'கொண்ட' என்னும் சொல்லும் மறைந்து வந்துள்ளன.

53. பொருத்துக :

a) காக்கென்று	i) இடைக்குறை
b) கணீர்	ii) வினைத் தொகை
c) உய் முறை	iii) வேற்றுமைத் தொகை
d) மெய் முறை	iv) தொகுத்தல் விகாரம்

A) (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)

B) (a)-(iii), (b)-(ii), (c)-(i), (d)-(iv)

C) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

D) (a)-(ii), (b)-(i), (c)-(iii), (d)-(iv)

விளக்கம்: **விடை: (A)**

காக்கென்று – தொகுத்தல் விகாரம்

'காக்கவென்று' என்னும் சொல் தொகுத்துச் (சுருங்கி) 'காக்கென்று' என வந்துள்ளது.

கணீர் – இடைக்குறை

சொல்லின் இடையில் உள்ள எழுத்து (கண்ணீர்) குறைந்து வந்துள்ளதால் இது இடைக்குறை எனப்படும்.

உய்முறை – வினைத் தொகை

உய்ந்த முறை, உய்கின்ற முறை, உய்யும் முறை என முக்காலமும் மறை வந்துள்ளது.

மெய் முறை – வேற்றுமைத் தொகை

'மெய்யினது முறை' என ஆறாம் வேற்றுமை உருபு ('அது') மறைந்து வந்துள்ளது.

54. இது செய்வாயா ? என்று வினவிய போது 'நீயே செய்' என்று கூறுவது எவ்வகை விடை ?

A) ஏவல் விடை B) மறை விடை

C) இனமொழி விடை D) சுட்டு விடை

விளக்கம்: **விடை: (A)**

ஏவல் விடை

ஒரு காரியத்தைச் சொன்னவரிடமே செய்யச் சொல்வது 'ஏவல் விடை ஆகும்.

எ.கா – 'இதனைச் செய்வாயா?' என வினவினால் 'நீயே செய் ' எனக் கூறுவது.

மறைவிடை

ஒரு காரியத்தைச் செய்ய மறுத்துக் கூறுவது மறைவிடை' எனப்படும்.

எ.கா– 'இதனைச் செய்வாயா?' என வினவினால் 'செய்யேன்' என மறுப்பது

சுட்டுவிடை

'இது, அது என்று சுட்டிக்காட்டி பதில் கூறினால் அது 'சுட்டு விடை' எனப்படும்.

எ.கா – 'கரூருக்கு வழி யாது?' என்று கேட்டால் 'இது ' என சுட்டிக் காட்டுவது

இனமொழி விடை

ஒரு பொருளைக் கேட்கும்பொழுது இல்லை என்று கூறாமல் அதற்குப் பதில் வேறு பொருள் உள்ளது எனக் கூறுவது.

எ.கா – "துவரை உள்ளதா?' என்ற வினாவிற்கு உளுந்து உள்ளது' என விடை கூறுவது.

55. கீழ்க்காணும் தொடரில் சரியான மரபுத் தொடர் எது ?

A) கோவிந்தன் சோறு சாப்பிட்டு பால் பருகினான்

B) கோவிந்தன் சோறு உண்டு பால் குடித்தான்

C) கோவிந்தன் சோறு தின்று பால் பருகினான்

D) கோவிந்தன் சோறு உண்டு பால் பருகினான்

விளக்கம்: **விடை: (D)**

சரியான மரபுத் தொடர்

கோவிந்தன் சோறு உண்டு பால் பருகினான்

56. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்.

இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி :

A) பிறிதுமொழிதல் அணி B) உவமையணி

C) உருவக அணி D) வேற்றுமை அணி

விளக்கம்: **விடை: (A)**

புலவர் தான் கூற வந்த கருத்தை நேரடியாகக் கூறாமல், அதற்கு உவமையாகும் வேறொரு பொருளை மட்டும் கூறி, அதன் மூலம் கருத்தைப் புரிய வைப்பது பிறிதுமொழிதல் அணி ஆகும்.

குறளின் பொருள்:

மயிலிறகு மிகவும் லேசானதுதான். ஆனால், அதனை அளவுக்கு அதிகமாக வண்டியில் ஏற்றினால், அந்த வண்டியின் அச்சு முறிந்துவிடும்.

வெளிப்படையாகக் கூறப்படும் உவமை:

மயிலிறகு அதிகம் ஏற்றினால் வண்டியின் அச்சு முறியும்.

மறைமுகமாக உணர்த்தும் கருத்து:

பகைவர்கள் தனித்தனியாகப் பார்க்கும்போது எளியவர்களாக (வலிமையற்றவர்களாக) தோன்றலாம். ஆனால், அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்தால், எவ்வளவு வலிமைமிக்க அரசராக இருந்தாலும் அவரை அழித்துவிடுவார்கள்.

57. ஈரெழுத்துச் சொற்களாக அமையும் குற்றியலுகரம் எது ?

a) உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்
b) இடைத் தொடர்க் குற்றியலுகரம்
c) நெடில் தொடர்க் குற்றியல்குகரம்
d) வன் தொடர்க் குற்றியலுகரம்

A) (a) மட்டும் சரி B) (c) மட்டும் சரி
C) (a) (c) சரி D) (a) (b) (c) (d) சரி

விளக்கம்: **விடை: (B)**

குற்றியலுகரம் ஆறு வகைப்படும். அவற்றுள் ஈரெழுத்துச் சொற்களாக அமைவது நெடில்தொடர்க் குற்றியலுகரம் மட்டுமே ஆகும்.

நெடில்தொடர்க் குற்றியலுகரம்:

தனி நெடில் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் ஆகும். இவை எப்போதும் இரண்டு எழுத்துக்களைக் கொண்ட (ஈரெழுத்து) சொற்களாக மட்டுமே வரும்.

எடுத்துக்காட்டுகள்:

பாகு (பா + கு) – 'பா' என்பது நெடில் எழுத்து.

காது (கா+து) – 'கா' என்பது நெடில் எழுத்து.

ஆறு (ஆ + று) –'ஆ' என்பது நெடில் எழுத்து.

மற்ற குற்றியலுகரங்கள்:

உயிர்த்தொடர், வன்தொடர், மென்தொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர் ஆகிய அனைத்தும் இரண்டிற்கும் மேற்பட்ட எழுத்துக்களைக் கொண்ட சொற்களாகவே வரும்.

58. "நந்தவனம் கண் திறந்து
நற்றமிழ்ப் பூ எடுத்து"
இப்பாடல் அடிகளில் இடம் பெற்றுள்ள சொற்கள் ?

A) இடைச்சொற்கள், வினைச்சொற்கள்
B) பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள்
C) பெயர்ச்சொற்கள், இடைச்சொற்கள்
D) உரிச்சொற்கள், பெயர்ச்சொற்கள்

விளக்கம்: **விடை: (B)**

"நந்தவனம் கண் திறந்து
நற்றமிழ்ப் பூ எடுத்து"

இப்பாடல் வரிகளில் உள்ள சொற்களை ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்த்தால், அவை பெயர்ச்சொற்களாகவும் வினைச்சொற்களாகவும் இருப்பதை அறியலாம்:

பெயர்ச்சொற்கள்: ஒரு பொருளின், இடத்தின் அல்லது காலத்தின் பெயரைக் குறிக்கும் சொற்கள் பெயர்ச்சொற்கள் ஆகும்.

நந்தவனம் – பூஞ்சோலையைக் குறிக்கும் பெயர்ச்சொல்.

கண் – உறுப்பைக் குறிக்கும் பெயர்ச்சொல்

நற்றமிழ் (நன்மை + தமிழ்) –மொழியைக் குறிக்கும் பெயர்ச்சொல்

பூ– மலரைக் குறிக்கும் பெயர்ச்சொல்.

வினைச்சொற்கள்: ஒரு செயலை அல்லது வினையைக் குறிக்கும் சொற்கள் வினைச்சொற்கள் ஆகும்.

திறந்து – 'திறத்தல்' என்ற வினையைக் குறிக்கும் எச்ச வினைச்சொல்

எடுத்து – 'எடுத்தல்' என்ற வினையைக் குறிக்கும் எச்ச வினைச்சொல்

59. அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கின்றேன். இத்தொடரில் வரும் ஆகுபெயரினைத் தேர்ந்தெடுக்க.

A) பொருளாகு பெயர் B) எண்ணலளவை ஆகுபெயர்
C) தொழிலாகு பெயர் D) கருத்தாவாகு பெயர்

விளக்கம்: **விடை: (D)**

ஆகு பெயர்

ஒரு பொருளின் இயற்பெயர் அதனைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்குப் பெயராகி வருவது ஆகுபெயராகும்.

கருத்தாவாகு பெயர்

அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கின்றேன்'' என்ற தொடர், அறிஞர் அண்ணா என்னும் மனிதரை நேரடியாகப் படித்ததைக் குறிக்கவில்லை.

உண்மையான அர்த்தம்: அவர் இயற்றிய நூல்களைப் படித்தேன் என்பதைக் குறிக்கிறது. இவ்வாறு ஒரு நூலாசிரியரின் (கருத்தாவின்) பெயர், அவர் இயற்றிய நூல்களுக்கு ஆகி வருவது கருத்தாவாகு பெயர் எனப்படும்.

பொருளாகு பெயர்

தாமரை மலர்ந்தது. (தாமரை என்பது வேர், கொடி, இலை, பூ அனைத்தும் சேர்ந்த முழுப்பொருள். ஆனால் இங்கு பூவை மட்டும் குறிக்கின்றது

தொழிலாகு பெயர்

வளவன் வற்றல் உண்டான். (வற்றல் என்பது தொழிலின் பெயர். வற்றுதலை உடைய உணவுக்குப் பெயராகி வந்தது)

எண்ணலளவை ஆகுபெயர்

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி. (இங்கு நாலும், இரண்டும் என்பது முறையே நாலடியாரையும், திருக்குறளையும் குறிக்கின்றது)

60. மூவர் என்னும் சொல்லின் சரியான பகுபத அமைப்பு முறை :

A) மூ + வ் + அர் B) மூவ் + அர்
C) மூன்று + வ் + அர் D) மூன்று + ஆவ்+அர்

விளக்கம்: **விடை: (C)**

'மூவர்' என்னும் சொல் ஒரு பெயர் பகுபதம் ஆகும்.

பகுபத உறுப்பிலக்கணப்படி பிரிக்கும் முறை

'மூவர்' என்பதில் முதன்மைப் பொருள் தரும் அடிச்சொல் 'மூன்று' என்று எண்ணிக்கையாகும். புணர்ச்சி விதியின்படி 'மூன்று' என்பது 'மூ' எனத் திரிந்து நிற்கிறது.

வ் (சந்தி/உடம்படுமெய்): நிலைமொழியின் ஈற்றில் 'மூ' (உயிர் எழுத்து) இருப்பதாலும், வருமொழியின் முதலில் 'அர்' (உயிர் எழுத்து) இருப்பதாலும், இரண்டு உயிரெழுத்துகளை இணைக்க 'வ்' என்ற உடம்படுமெய் தோன்றுகிறது.

அர் (விகுதி) : இது பலர்பாலக் குறிக்கும் பெயர் விகுதி ஆகும்.

எனவே, மூன்று + வ் + அர் = மூவர் எனப் பிரியும்.

★★★

PART - III ENGLISH

61. Ooty was the summer capital of the ..... during the British rule.

A) British B) Todas
C) Tourists D) Madras Presidency

Explanation **Ans : (D)**

During British rule, Ooty (Udhagamandalam) served as the summer capital of the Madras Presidency because of its cool climate. British officials shifted their administration there during the summer months to escape the heat of the plains.

62. Match the words in column 'A' with their meanings in column 'B'.

A	B
a) Physician	1. bring back
b) Restore	2. surprise attack
c) Repent	3. Medical practitioner
d) Ambush	4. regret

Codes:

	a)	b)	c)	d)
A)	3	1	4	2
B)	2	3	1	4
C)	4	3	2	1
D)	3	4	2	1

Explanation **Ans : (A)**

A physician is a qualified medical practitioner. Restore means to bring back to a former condition. Repent means to feel regret or remorse for a wrong action. An ambush is a surprise attack, usually from a concealed position.

63. "Remember, no men are foreign and no countries strange".

"Remember, no men are strange, no countries foreign".

What is the Literary Device employed here ?

A) Repetition B) Transferred Epithet
C) Anaphora D) Simile

Explanation **Ans : (A)**

The literary device used is repetition, as the word "Remember" and the central idea are deliberately repeated to emphasize the poet's message of universal brotherhood and human equality. There is no comparison as in a simile, no transferred epithet, and no repeated word at the beginning of successive lines (anaphora).

64. Match the professions with their relevant job descriptions.

A	B
a) Pathologist	1. Studies language and their structure
b) Ornithologist	2. Studies the matter that constitutes the earth
c) Geologist	3. Studies diseases
d) Linguist	4. Studies birds

Codes:

	a)	b)	c)	d)
A)	4	2	1	3
B)	3	4	2	1
C)	2	4	3	1
D)	1	2	3	4

Explanation **Ans : (B)**

A Pathologist studies diseases and their causes. An Ornithologist specializes in the study of birds. A Geologist studies the Earth's structure, rocks, and minerals. A Linguist studies languages, including their structure, grammar, and evolution. These profession–definition pairs are common vocabulary questions in competitive examinations.

65. In Public Speaking skills, the information should not be .....

A) Purposeful
B) Exciting
C) Controversial
D) Commercial

Explanation **Ans : (C)**

Public speaking information should be purposeful, exciting, and engaging—but not controversial, as it can alienate the audience or create conflict. Controversial topics may trigger emotional responses hindering effective communication.

66. A Review helps the reader to .....

A) Learn Grammar
B) Decide whether to read or watch something
C) Write
D) Memorize

Explanation **Ans : (B)**

A review evaluates a book, film, play, or other work by discussing its strengths and weaknesses. Its primary purpose is to help readers or viewers decide whether the work is worth reading or watching. Reviews provide a balanced opinion rather than teaching grammar or memorization.

67. What is the expansion of EMI ?

A) Equated Monthly Investment
B) Easy Monthly Instalment
C) Equated Monthly Instalment Scheme
D) Easy Monthly Investment

Explanation **Ans : (C)**

EMI stands for Equated Monthly Instalment. In banking and finance, it refers to the fixed amount paid every month toward repayment of a loan, including both principal and interest.

Note: In standard banking terminology, the expansion is Equated Monthly Instalment (EMI). The word "Scheme" is not part of the official expansion, but Option C is the closest and intended answer in this question.

68. Which of the following is the correct order of a good speech?

A) Thanking the audience, summarizing the views and elaborating the main points
B) Elaborating the main points, thanking the audience and summarize the views
C) Introducing the topic, elaborating the main points and summarizing the views
D) Summarizing the views, elaborating the main points and thanking the audience

Explanation **Ans : (C)**

A well-structured speech follows three stages: Introduction, Body, and Conclusion. The introduction captures attention and introduces the topic. The body explains the main ideas with supporting details. The conclusion summarizes the key points and provides closure. Thanking the audience usually comes after the conclusion.

69. Repetition of two or more consonant sounds is called as .....

A) Assonance B) Connotation
C) Alliteration D) Personification

Explanation **Ans : (C)**

Alliteration is the repetition of initial consonant sounds in nearby words (e.g., "Peter Piper picked"). Assonance repeats vowel sounds; Personification gives human traits to objects; Connotation is implied meaning.

70. Given below are two statements on Finite verbs.

Statement I : Finite verbs are used in the present tense and past tense.
Statement II : Finite verbs are usually gerunds, infinitives or participle.

Choose the correct answer from the options given below :

A) Both Statement I and Statement II are true
B) Both Statement I and Statement II are false
C) Statement I is true but Statement II is false
D) Statement I is false but Statement II is true

Explanation **Ans : (C)**

Finite verbs change form to show tense (present/past) and agree with the subject (e.g., He runs / He ran). Statement II is false because gerunds, infinitives, and participles are non-finite (verbals)—they do not show tense or person.

71. "Animal Farm" is :

A) A Novel
B) A Comedy
C) A tragic-comedy
D) A Allegorical Novella

Explanation **Ans : (D)**

Animal Farm is an allegorical novella—a short novel with a hidden political meaning. It uses farm animals to represent figures from the Russian Revolution and Stalinist era. Orwell himself called it "A Fairy Story" but it functions as a political fable.

72. A Cinquain poem should have ..... lines and the finished poem should have only ..... words.

A) 11, 5 B) 12, 6
C) 5, 11 D) 6, 12

Explanation **Ans : (C)**

A Cinquain poem has a fixed structure: 5 lines with a specific syllable pattern (2-4-6-8-2) or word count pattern (1-2-3-4-1). The finished poem must have exactly 11 words in total.

73. In a certain code language, if pen means Eraser, Eraser means Book, Book means Scale, Scale means Sharpener, Sharpener means Duster and Duster means Table, then what is the name of the object that is used to clean the black board in that language ?

A) Duster B) Sharpener
C) Table D) Scale

Explanation **Ans : (B)**

The object used to clean the blackboard is a Duster. In the given code language, "Sharpener" means "Duster". Therefore, the coded name for the object used to clean the blackboard is Sharpener. Such questions test logical reasoning by requiring you to identify the code word corresponding to the actual object.

74. An ..... is a word that describes a noun.

A) Pronoun B) Adverb
C) Adjective D) Adjunct

Explanation **Ans : (C)**

An adjective is a word that modifies or describes a noun or pronoun (e.g., beautiful girl, tall building). Pronoun replaces a noun; Adverb modifies verb/adjective; Adjunct is an optional sentence element.

75. Given below are two statements regarding Phrase and Clause.

Statement I : Phrase - A phrase is a group of words with a finite verb in it.
Statement II : Clause - A clause is a group of words with an infinite verb in it.

Choose the correct answer from the options given below.

A) Both Statement I and Statement II are true
B) Both Statement I and Statement II are false
C) Statement I is true but Statement II is false
D) Statement I is false but Statement II is true

Explanation **Ans : (B)**

A phrase lacks a finite verb (e.g., in the garden). A clause has a finite verb and subject (e.g., he runs). Statement I is false because phrases do not have finite verbs; Statement II is false because clauses have finite (not infinite) verbs.

76. Co-ordinate conjunctions are used to connect the Independent clauses in .....

A) Simple Sentences
B) Imperative Sentences
C) Complex Sentences
D) Compound Sentences

Explanation **Ans : (D)**

Coordinating conjunctions (FANBOYS: For, And, Nor, But, Or, Yet, So) join two or more independent clauses of equal

importance. A sentence formed by joining independent clauses with coordinating conjunctions is called a compound sentence. Simple sentences have only one independent clause, while complex sentences contain dependent clauses.

77. Choose the correct tense form for the given sentence.

Saran ..... a poem for two hours when his friends arrived.

A) have been writing **B)** has been writing
C) had been writing **D)** will have been writing

Explanation **Ans : (C)**

The Past Perfect Continuous Tense is used to describe an action that began in the past, continued for a period, and was still in progress before another past action occurred. Here, "for two hours" shows duration, and "when his friends arrived" is the later past event. Hence, had been writing is correct.

78. What are the three main types of Dependent Clauses ?

A) Adjective, Adverb and Noun
B) Adjective, Adverb and Assertive
C) Adverb, Noun and Adjunct
D) Adjective, Noun and Affirmative

Explanation **Ans : (A)**

A dependent (subordinate) clause cannot stand alone as a complete sentence. The three main types are Noun Clauses (function as nouns), Adjective (Relative) Clauses (modify nouns), and Adverb Clauses (modify verbs, adjectives, or adverbs). These are fundamental concepts in English grammar.

79. Choose the suitable comparative degree of 'bad'.

A) bader **B)** worser
C) worse **D)** more bad

Explanation **Ans : (C)**

The adjective bad is an irregular adjective. Its degrees of comparison are bad – worse – worst. Therefore, the comparative degree is worse. Forms such as bader, worser, and more bad are grammatically incorrect in standard English.

80. Choose the correct expansion for PDF.

A) Provident Data Fund
B) Portable Document Format
C) Profit and Dividend Fund
D) Personal Document Format

Explanation **Ans : (B)**

PDF stands for Portable Document Format, a file format developed by Adobe for presenting documents consistently across different devices and operating systems. PDF files preserve the original layout, fonts, images, and formatting, making them ideal for sharing and printing documents.

81. What is an acronym ?

Choose the most appropriate option given below.

A) It is the antonym of micro.
B) An acronym is an abbreviation form of a phrase and can be read as a word.
C) An acronym is a shortened form of a word or phrase.
D) An acronym is a pair of words with same spelling but different meaning and pronunciation.

Explanation **Ans : (B)**

An acronym is formed from initial letters of a phrase and pronounced as a single word (e.g., RADAR, NASA). Option C describes abbreviation in general. Option A is incorrect (antonym of micro is macro). Option D describes homonyms.

82. What does "The world is a stage" mean ?

A) Simile **B)** Metaphor
C) Epithet **D)** Hyperbole

Explanation **Ans : (B)**

"The world is a stage" is a Metaphor—a direct comparison without using 'like' or 'as', asserting one thing is another. Simile uses 'like/as'; Hyperbole is exaggeration; Epithet is a descriptive phrase.

83. An example of contraction is .....

A) you've **B)** I am
C) cannot **D)** you 'are

Explanation **Ans : (A)**

A contraction combines two words by omitting letters and replacing them with an apostrophe. "You've" is the contraction of "you have." "Cannot" is a single word (not contraction; it's a compound). "I am" and "you are" are uncontracted forms.

84. "The kittens fur is like a velvet coat" is an example of :

A) Alliteration **B)** Imagery
C) Personification **D)** Metaphor

Explanation **Ans : (B)**

"Velvet coat" creates a visual and tactile imagery—vivid sensory description appealing to the sense of touch. It's not metaphor (no direct "is" comparison—it uses "like" making it a simile if compared, but the effect is imagery).

85. ..... is used to emphasize a feeling or idea.

Choose the most appropriate answer from the options given below.

A) Irony **B)** Repetition
C) Imagery **D)** Personification

Explanation **Ans : (B)**

Repetition is a literary device where words/phrases are repeated to emphasize a feeling, idea, or theme (e.g., Martin Luther King's "I have a dream"). Irony conveys opposite meaning; Imagery creates sensory experience; Personification gives human traits.

86. "Thro scudding drifts the rainy Hyades Vext the dim sea"..... Identify the figure of speech employed here.

A) Metaphor **B)** Simile
C) Personification **D)** Hyperbole

Explanation **Ans : (C)**

In these lines from Alfred Lord Tennyson's poem, the Hyades (a group of stars associated with rain) are

described as vexing (disturbing) the sea. Since a non-human object is given the human quality of causing annoyance, the figure of speech is Personification.

87. The title of the poem 'Sea Fever' means .....

A) flu fever
B) the poet's deep wish to be at sea
C) the poet's fear of the sea
D) a tall ship

Explanation **Ans : (B)**

John Masefield's poem Sea Fever expresses the poet's strong longing and irresistible desire to return to the sea. The title symbolizes his love for a sailor's life rather than illness or fear. The repeated line "I must go down to the seas again" emphasizes this deep yearning.

88. Re-arrange the jumbled sentences.

1. Gulliver promptly fell asleep because his drink had a sleeping draught.
2. Gulliver dragged himself along the shore.
3. Gulliver was lodged in an old and disused temple.
4. Gulliver was really hungry.

Select the correct answer:

A) 4, 3, 1, 2 B) 3, 2, 4, 1
C) 2, 3, 1, 4 D) 2, 4, 1, 3

Ans : (D)

Explanation

Correct Sequence:

1. Gulliver dragged himself along the shore.
2. Gulliver was really hungry.
3. Gulliver promptly fell asleep because his drink had a sleeping draught.
4. Gulliver was lodged in an old and disused temple.

After reaching the shore, Gulliver was exhausted and hungry. The Lilliputians offered him food and drink mixed with a sleeping draught, causing him to fall asleep. While asleep, they transported him and lodged him in an old, unused temple. The sequence follows the events in Jonathan Swift's Gulliver's Travels.

89. Choose the word that has the same relationship as the pair on the left.

mango : sweet : : lime : ?

A) fruit B) sour
C) plant D) juice

Explanation **Ans : (B)**

The relationship is fruit and its characteristic taste. A mango is generally associated with a sweet taste, while a lime is commonly associated with a sour taste. Therefore, sour correctly completes the analogy.

90. Which poem was recited by Mr. Sanyal at the tea shop?

A) Geetanjali B) Panraksha
C) National Anthem D) Vande Mataram

Explanation **Ans : (B)**

In Satyajit Ray's short story "The Attic," Mr. Sanyal recites the poem Panraksha ('Keeping of a Promise') by Rabindranath Tagore at Nagen uncle's tea shop. This specific poem is significant because Sanyal had won a prize for reciting it during his school days, and he uses it to trigger Aditya's memory and recognition.

Part V - சமூக அறிவியல்

91. சரியான காலவரிசையை தேர்ந்தெடு:

A) போர்ச்சுக்கல், ஆங்கிலேயர்கள், டச்சுக்காரர்கள், டேனியர்கள், பிரெஞ்சுக்காரர்கள்
B) ஆங்கிலேயர்கள், போர்ச்சுக்கல், டேனியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள்
C) டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், டேனியர்கள், போர்ச்சுக்கல், பிரெஞ்சுக்காரர்கள்
D) போர்ச்சுக்கல், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், டேனியர்கள், பிரெஞ்சுக்காரர்கள்

விடை : (D)

விளக்கம் :

போர்ச்சுகீசியர்கள் : கி.பி. 1498 ஆண்டு வாஸ்கோடகாமா கடல்வழியாக முதன்முதலில் இந்தியாவிற்கு வந்தார்.

டச்சுக்காரர்கள்: கி.பி. 1602 ஆம் ஆண்டு டச்சு கிழக்கு இந்திய நிறுவனம் உருவாக்கப்பட்டு இந்தியாவிற்கு வந்தனர்.

ஆங்கிலேயர்கள்: கி.பி. 1600 இல் பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனம் தொடங்கப்பட்டு, கி.பி. 1608 இல் இந்தியாவிற்கு வந்தனர்.

டேனியர்கள் : கி.பி. 1616 ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்தனர்.

பிரெஞ்சுக்காரர்கள் : கி.பி. 1664 ஆண்டு இறுதியாக பிரெஞ்சு கிழக்கு இந்திய நிறுவனம் உருவாக்கப்பட்டு வருகை தந்தனர்.

92. ..... காலத்தில், பெர்னாண்டஸ் மதுரைக்கு வருகை புரிந்து அங்கு ஒரு தொடக்கப்பள்ளியை நிறுவினார்

A) சென்னப்ப நாயக்கர் B) செஞ்சி நாயக்கர்
C) வீரப்ப நாயக்கர் D) வையப்ப நாயக்கர்

விளக்கம் : **விடை : (C)**

ஐரோப்பிய கிறித்தவ மிஷனரியான (சமயப் பரப்புரையாளர்) பெர்னாண்டஸ் (Fr. Fernandez) மதுரைக்கு வந்தபோது, அங்கு மதுரை நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்த வீரப்ப நாயக்கர் ஆட்சி புரிந்து கொண்டிருந்தார். வீரப்ப நாயக்கரின் அனுமதியைப் பெற்று மதுரையில் கிறித்தவ சமயப் பணிகளுடன், அங்கு ஒரு தொடக்கப் பள்ளியையும் பெர்னாண்டஸ் நிறுவினார்.

நாயக்கர் ஆட்சியின் கீழ் மதுரை மண்டலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களைத் தாண்டி, முறையான கல்வி அமைப்பை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகால ஐரோப்பிய முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

93. அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் தொடங்கப்பட்ட ஆண்டு .....

A) 1840 B) 1835
C) 1838 D) 1839

விடை : (D)

விளக்கம் :

அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் 1839 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதுவே வர்த்தக ரீதியில் தேயிலை வளர்ப்பதற்கும் தயாரிப்பதற்கும் இந்தியாவில் நிறுவப்பட்ட முதல் தேயிலை நிறுவனமாகும்.

94. சரியாகப் பொருத்தி விடையைத் தெரிவு செய்க.

a) அடிமை வம்சம்	1. 1414–1451
b) கில்ஜி வம்சம்	2. 1320–1414
c) துக்ளக் வம்சம்	3. 1290–1320
d) சையது வம்சம்	4. 1206–1290

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	3	1	2	4
B)	4	3	2	1
C)	1	2	3	4
D)	2	1	4	3

விளக்கம் : விடை : (B)

டெல்லி சுல்தானியம்

1206–1526 காலகட்டத்தில் ஐந்து வெவ்வேறு வம்சங்களைச் சேர்ந்தவர்கள் தில்லி சுல்தானியத்தை ஆட்சி செய்தனர்.

1. அடிமை வம்சம் (1206–1290) – 10 சுல்தான்கள்
2. கில்ஜி வம்சம் (1290–1320) – 6 சுல்தான்கள்
3. துக்ளக் வம்சம் (1320–1414) – 11 சுல்தான்கள்
4. சையது வம்சம் (1414–1451) – 4 சுல்தான்கள்
5. லோடி வம்சம் (1451–1526) – 3 சுல்தான்கள்

95. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து பொருத்துக.

a) குத்புதீன் ஐபக்	1. 1290–1296
b) பால்பன்	2. 1296–1316
c) ஜலாலுதீன் கில்ஜி	3. 1266–1287
d) அலாவுதீன் கில்ஜி	4. 1206–1210

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	4	2	3	1
B)	4	3	1	2
C)	4	3	2	1
D)	1	2	3	4

விளக்கம் : விடை : (B)

வ. எண்	வம்சம்	ஆட்சியாளர்கள்
1.	அடிமை வம்சம்	(1206-1290)
	குத்புதீன் ஐபெக்	(1206-1210)
	இல்டுமிஷ்	(1210-1236)
	சுல்தானா இரசியா	(கி.பி. 1236-1240)
	பால்பன்	(1266-1287)
2.	கில்ஜி வம்சம்	(1290-1320)
	ஜலாலுதீன் கில்ஜி	(1290-1296)
	அலாவுதீன் கில்ஜி	(1296-1316)
3.	துக்ளக் வம்சம்	(1320-1414)
	கியாசுதீன் துக்ளக்	(கி.பி.1320-1325)
	முகமது பின் துக்ளக்	கி.பி. 1325 - 1351)
	பிரோஷ் ஷா துக்ளக்	(1351 - 1388)
4.	சையது வம்சம்	(1414-1451)
	கிஸர்கான்	(1414-1421)
	முபாரக்ஷா	(1421- 1434)
	முகமது ஷா	(1435 - (1445)
	ஆலம்ஷா	(1445 - 1451)
5.	லோடி வம்சம்	(1451-1526)
	பஹ்லால் லோடி	(1451- 1489)
	சிக்கந்தர் லோடி	(1489- 1517)
	இப்ராஹிம் லோடி	(1517-1526)

96. ஒரு சாதாரண வருவாய்த்துறை அலுவலராகத் தனது பணியைத் தொடங்கிய பாலாஜி விஸ்வநாத் ..... இல் பேஷ்வா ஆனார்

A) 1712 B) 1713
C) 1715 D) 1716

விளக்கம் : விடை : (B)

பேஷ்வாக்களின் ஆட்சி

பேஷ்வா என்பவர் சிவாஜியின் அஷ்டபிரதான் அமைப்பில் முதன்மையானவர். 18–ஆம் நூற்றாண்டில் பேஷ்வாக்கள் அதிக அதிகாரங்களைப் பெற்று ஆட்சி புரிந்தனர்.

பாலாஜி விஸ்வநாத் (1713–1720)

சாதாரண வருவாய்த்துறை அலுவலராகத் தமது பணியைத் தொடங்கிய பாலாஜி விஸ்வநாத் 1713–இல் பேஷ்வா ஆனார்.

இவர் ஆற்றல் மிகுந்த முதல் பேஷ்வா ஆவார். உள்நாட்டுப் போரில் ஏற்பட்ட சிக்கல்களை நீக்க மன்னர் சாஹூவுக்கு உதவினார்.

97. "நீல் தர்பன்" என்ற நாடகம் ..... என்பவரால் எழுதப்பட்டது.

A) பக்கிம் சந்திர சாட்டர்ஜி B) ரவீந்திரநாத் தாகூர்
C) W.C.பானர்ஜி D) தீனபந்து மித்ரா

விளக்கம் : விடை : (D)

தினபந்து மித்ரா என்பவரால் 1858–1859 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வங்காள மொழி நாடகம் நீல் தர்பன் (தலைப்பு: இண்டிகோவின் கண்ணாடி) ஆகும்.

98. நாடு முழுவதும் 10+2+3 என்ற ஒரே மாதிரியான கல்விமுறையை அறிமுகப்படுத்திய குழுவின் தலைவராக இருந்தவர் யார்?

A) டாக்டர் இராதாகிருஷ்ணன்
B) டாக்டர் D.S. கோத்தாரி
C) சர் தாமஸ் மன்றோ
D) மெக்காலே பிரபு

விளக்கம் : விடை : (B)

1948–இல் பல்கலைக்கழக கல்வி குறித்த அறிக்கையைத் தயாரிக்க டாக்டர் இராதாகிருஷ்ணன் கல்விக் குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைகளைப் பின்பற்றி உயர்கல்வியின் தரத்தை நிர்ணயிக்க பல்கலைக்கழக மானியக்குழு அமைக்கப்பட்டது.

1964–இல் இந்திய அரசு D.S. கோத்தாரி தலைமையில் ஒரு கல்விக் குழுவை நியமித்தது. அக்குழு 14 வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய தொடக்கக் கல்வியையும் நாடு முழுவதும் ஒரேமாதிரியான 10 + 2 + 3 கல்வி அமைப்பையும் பரிந்துரை செய்தது.

99. சதி எனும் நடைமுறையை ஒழிக்க சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு .....

A) 1820 B) 1826
C) 1829 D) 1832

விளக்கம் : விடை : (C)

கணவர் இறந்தவுடன் அவரது இறுதிச் சடங்குத் தீயில் மனைவியையும் உயிருடன் எரிக்கும் கொடூரமான 'சதி' (உடன்கட்டை ஏறுதல்) பழக்கத்தைத் தடை செய்ய 1829 ஆம் ஆண்டு டிசம்பர் 4 அன்று வங்காள சதி ஒழுங்குமுறைச் சட்டம் (Bengal Sati Regulation) கொண்டு வரப்பட்டது.

அப்போதைய பிரிட்டிஷ் இந்தியாவின் கவர்னர் ஜெனரலான வில்லியம் பெண்டிங்க் பிரபு இச்சட்டத்தை இயற்றினார்.

முக்கியப் பங்கு: இந்திய சமூக சீர்திருத்தவாதியான ராஜா ராம் மோகன் ராய் சதிக்கு எதிராகத் தீவிரமாகப் போராடி, இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முதன்மைக் காரணமாக இருந்தார்.

இச்சட்டத்தின் மூலம் சதி நடைமுறை முற்றிலும் சட்டவிரோதமானது என அறிவிக்கப்பட்டு, அதை ஆதரிப்பதோ அல்லது தூண்டுவதோ கொலைக் குற்றத்திற்கு இணையான தண்டனைக்குரிய குற்றமாக மாற்றப்பட்டது.

100. ஆக்ராவை நிர்மாணித்து அதைத் தலைநகராக ஆக்கிக் கொண்ட அரசர் யார்?

A) சிக்கந்தர் லோடி B) இப்ராகிம் லோடி
C) பகலூல் லோடி D) அலாவுதீன் கில்ஜி

விடை : (A)

விளக்கம் :

டெல்லியை ஆண்ட சுல்தான்களில் இறுதியாக ஆட்சி செய்தது லோடி மரபாகும். லோடி வம்ச ஆட்சியை நிறுவியவர் பஹ்லோல் லோடி ஆவார். இவரது ஆட்சிக்காலம் கி.பி.1451–1489 ஆகும். இவரது மகன் சிக்கந்தர் லோடியின் ஆட்சிக் காலம் கி.பி.1489–1517 ஆகும். இவர் தலைநகரை தில்லியிலிருந்து ஆக்ராவிற்கு மாற்றினார். இந்நகரம் நிறுவப்படுவதற்கு அடித்தளமாக இருந்தார்.

101. அஸ்ஸாமில் "இடம் பெயர் வேளாண்மை" செய்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ள இடங்கள்

A) லேகுரதேவா (ம) சோபானி முண்டா
B) செனுவார் (ம) மககரா
C) ராக்கி கார்ஹி (ம) டோலவீரா
D) தாஜுலி ஹோடிங் (ம) சருதரு

விடை : (D)

விளக்கம் :

தாஜுலி ஹோடிங் மற்றும் சருதரு : இவை இரண்டும் வடகிழக்கு இந்திய மாநிலமான அஸ்ஸாமில் அமைந்துள்ள முக்கியமான புதிய கற்கால தளங்கள் ஆகும். இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளில், மக்கள் காடுகளை அழித்து, எரித்து விவசாயம் செய்ததற்கான (இடப்பெயர் வேளாண்மை) பழங்கால சான்றுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

லேகுரதேவா, சோபானி முண்டா, மககரா: இவை உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள வரலாற்றுத் தளங்கள்.

செனுவார்: இது பீகார் மாநிலத்தில் உள்ள ஒரு புதிய கற்கால தளம்.

ராக்கி கார்ஹி, டோலாவீரா: இவை சிந்து சமவெளி நாகரிகத்திற்கு சொந்தமான வடமேற்கு இந்தியத் தளங்கள் ஆகும்.

102. கீழ்க்கண்ட வாக்கியத்தில் மகல்வாரி முறைக்கு தகுந்த சரியான கூற்றை தேர்ந்தேடு:

a) கிராமத் தலைவர் அரசுக்கும், கிராம மக்களுக்குமிடையே இடைத்தரகராக செயல்பட்டார்
b) வருவாய் ஒப்பந்தம் நேரடியாக விவசாயிகளுடன் செய்து கொள்ளப்பட்டது
c) ஜமீன்தார்கள் நில உடைமையாளர்களாக அங்கீகரிக்கப்பட்டனர்
d) நில அளவு மற்றும் விளைச்சலின் மதிப்பீடு கணக்கிடப்பட்டது

A) (b) B) (a)
C) (d) D) (c)

விடை : (B)

விளக்கம் :

மகல்வாரி முறை

- ஜமீன்தாரி முறையின் மாறுபட்ட வடிவமே மகல்வாரி முறையாகும். இதனை உருவாக்கியவர் ஹோல்ட் மெக்கன்ஸி ஆவார். இம்முறையில் சில அடிப்படை மாற்றங்களை 1833-இல் வில்லியம் பெண்டிங் பிரபு கொண்டுவந்தார். அம்மாற்றங்களை கொண்டு வருவதற்கு இராபர்ட் மௌன்ட்ஸ் பர்ட் என்பவர் வழிகாட்டினார்.
- மகல் (அ) கிராம விளைச்சலின் அடிப்படையில் வருவாய் மதிப்பீடு செய்யப்பட்டது. தொடக்கத்தில் மொத்த விளைச்சலில் மூன்றில் இரண்டு பங்கு நிலவருவாய் பெறப்பட்டது. பின்னர் வில்லியம் பெண்டிங் பிரபு மொத்த விளைச்சலில் 50% என நிர்ணயித்தார்.
- கிராமம் முழுவதும் நில வருவாயை வசூல் செய்து அதனை அரசுக்கு செலுத்த கிராமத்தலைவர் நியமிக்கப்பட்டார். இந்நடைமுறை முதலில் ஆக்ரா, அயோத்தி போன்ற இடங்களில் அமல்படுத்தப்பட்டு பின்னர் ஐக்கிய மாகாணங்களில் விரிவுப்படுத்தப்பட்டது.

நடைமுறைப்படுத்தப்பட்ட இடங்கள் : 1822-இல் கங்கைச் சமவெளி, வடமேற்கு மாகாணங்கள், மத்திய இந்தியாவின் சில பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மகல்வாரி முறையின் சிறப்புக் கூறுகள்

- கிராமத்தலைவர் அரசுக்கும் கிராம மக்களுக்கும் இடையே இடைத்தரகராக செயல்பட்டார்.
- இது கிராமவாரியான மதிப்பீடாக இருந்தது. ஒரே நபர் பல கிராமங்களை தன் வசம் வைத்திருந்தார்.
- கிராம நிலங்களுக்கு கிராமத்தைச் சேர்ந்த சமுதாயத்தினரே உரிமையாளராக இருந்தனர்.

இம்முறையினால் ஏற்பட்ட விளைவுகள்

- கிராமத்தலைவர், சலுகைகளை தமது சொந்த விருப்பங்களின் அடிப்படையில் தவறாகப் பயன்படுத்தினார்.
- விவசாயிகளுக்கு இம்முறை லாபத்தைத் தரவில்லை.
- கிராமத்தின் உயர்வகுப்பினருக்கு லாபகரமாக இருந்தது.

103. பிரெஞ்சு இராணுவத்தின் மூலம் நவீனப் போர் முறைகளில் பயிற்சி பெற்றவர்:

A) மருது சகோதரர்கள் B) தீரன் சின்னமலை
C) பூலித் தேவர் D) வேலு நாச்சியார்

விடை : (B)

விளக்கம் :

தீரன் சின்னமலை (1756 – 1805)

கொங்குப்பகுதியில் **பழையக்கோட்டை மன்றாடியார்** பட்டம் பெற்ற மதிப்புமிகு குடும்பத்தில் பிறந்தவர் தீரன் என்ற தீர்த்தகிரியார். வில்வித்தை, சிலம்பு, குதிரையேற்றம், நவீன போர் முறைகளில் இவர் வல்லவராக இருந்தார். இவர் வாழ்ந்த கொங்குப் பகுதி மைசூர் சுல்தானின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஒருமுறை வரிவசூல் செய்த பணத்துடன் மைசூருக்குத் திரும்பிக் கொண்டிருந்த முகமது அலி என்பவரை தீர்த்தகிரி வழிமறித்து வரிப்பணம் முழுவதையும் பறித்துக் கொண்டார். "சிவமலைக்கும் சென்னிமலைக்கும் இடையே இருந்த 'சின்னமலை' வரிப்பணத்தைப் பிடுங்கிக் கொண்டதாக சுல்தானிடம் போய்ச் சொல்" என்றார். அதன்பிறகு தீரன் சின்னமலை என்றே அழைக்கப்பட்டு வந்தார்.

சுல்தானின் படைகளும் இவருடைய படைகளும் நொய்யல் ஆற்றங்கரையில் மோதிக்கொண்டன. அதில் தீரன் சின்னமலையே வெற்றிபெற்றார். பிரெஞ்சுக்காரர்களால் பயிற்சியளிக்கப்பட்ட இவர் தொரங்கு மண்டலத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மற்றும் திப்புவுடன் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடினார். இவர் திப்புவின் இறப்பிற்குப் பிறகு கோட்டை ஒன்றைக் கட்டி, அதன் உள்ளிருந்தே போராட்டத்தைத் தொடர்ந்தார். எனவே அந்த இடம் 'ஓடாநிலை' என்று அழைக்கப்படுகிறது. கொரில்லா போர் முறையை இவர் கையாண்டார். இறுதியில் இவரது சமையல்காரரால் இவரும் இவரது சகோதரர்களும் ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடுக்கப்பட்டனர். 1805 ஜூலை 31 அன்று சங்ககிரிகோட்டையின் உச்சியில் அவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

104. தட்சசீல பல்கலைக்கழக இடிபாடுகளை கண்டறிந்தவர்:

A) அலெக்சாண்டர் பர்னஸ்
B) சார்லஸ் மேசன்
C) அலெக்சாண்டர் கன்னிங்காம்
D) சர் ஜான் மார்ஷல்

விடை : (C)

விளக்கம் :

பண்டைய இந்திய நகரமாக இருந்த தட்சசீலம் தற்போது வடமேற்கு பாகிஸ்தானில் உள்ளது. முக்கியமான தொல்பொருள் ஆராய்ச்சிப்

பகுதியான இதனை 1980–இல் யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளமாக அறிவித்தது. சாணக்கியர், 'அர்த்தசாஸ்திரம்' என்ற தனது நூலை இப்பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்து தொகுத்ததாகக் கூறப்படுகிறது. 19–ஆம் நூற்றாண்டின் மத்தியில் இப்பல்கலைக்கழகத்தின் இடிபாடுகளை தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அலெக்ஸாண்டர் கன்னிங்காம் கண்டறிந்தார்.

105. பெண்களுக்கான தேசிய ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு .....

A) ஜனவரி – 1992 B) ஜனவரி – 1993
C) மார்ச் – 1990 D) ஆகஸ்ட் – 1991

விளக்கம் : **விடை : (A)**

பெண்களுக்கான தேசிய ஆணையம் :

இது ஜனவரி 1992–இல் அமைக்கப்பட்டது. பெண்கள் தொடர்பான சட்டங்களை மறு ஆய்வு செய்வது, பெண்களுக்கு எதிரான அநீதிகள் மற்றும் உரிமைகள் மறுப்பு குறித்த தனிப்பட்ட புகார்களில் தலையிடுவது இதன் முக்கியப் பணிகள் ஆகும்.

106. குப்த அரசர்களுக்கு ஆலோசனைக்கு உதவி புரிந்த அமைச்சர்கள் குழு எது?

A) விஷ்யபதி B) சமிதி
C) பதகா D) சபா

விளக்கம் : **விடை : (D)**

குப்த வம்ச அரசர்களுக்கு நிர்வாகத்தில் ஆலோசனை வழங்க மற்றும் உதவி புரிய ஒரு வலுவான அமைச்சர்கள் குழு இருந்தது.

அலகாபாத் கல்வெட்டு:

புகழ்வாய்ந்த அலகாபாத் தூண் கல்வெட்டு, அரசருக்கு உதவியாக இருந்த 'சபா' என்ற குழுவைக் குறித்துக் குறிப்பிடுகிறது. இதுவே அமைச்சரவைக் குழுவாகச் செயல்பட்டிருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

107. ஆப்பிரிக்காவில் தோன்றி பின்னர் உலகத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்த மனித இனத்தின் மூதாதையர்:

A) எலிபஸ் நமடிகஸ் B) போஸ் நமடிகஸ்
C) ஹோமோ எரக்டஸ் D) ஹோமினின்

விளக்கம் : **விடை : (C)**

ஆப்பிரிக்காவில் தோன்றி, ஆசியா மற்றும் ஐரோப்பாவிற்கு முதன்முதலில் இடம்பெயர்ந்த மனித இனம் ஹோமோ எரக்டஸ் ஆவர்.

பெயரின் பொருள்:

'ஹோமோ எரக்டஸ்' என்றால் நிமிர்ந்து நேராக நடந்த மனிதன் என்று பொருளாகும்.

காலம்: இவர்கள் சுமார் 1.8 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் வாழ்ந்தனர்.

முக்கியக் கண்டுபிடிப்புகள்:

கற்கருவிகளைப் பயன்படுத்தியதோடு, நெருப்பின் பயனை முதன்முதலில் கண்டறிந்த முன்னோடிகளும் இவர்களே.

108. கீழ்க்காணும் இணைகளை கவனிக்கவும்.

i) உஷா – பெண்கடவுள்
ii) பலி – வரி
iii) கிராமணி – படைத்தளபதி
iv) சமிதி – மக்கள் கூடும் இடம்

மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது?

A) (i) B) (iv)
C) (ii) D) (iii)

விளக்கம் : **விடை : (D)**

i) உஷா – பெண்கடவுள்: இது சரியான இணை. ரிக் வேத காலத்தில் 'உஷா' என்பது விடியற்காலைக்கான பெண் தெய்வத்தைக் குறிக்கும்.

ii) பலி – வரி: இது சரியான இணை. வேத காலத்தில் மக்கள் அரசனுக்குத் தானாகவோ அல்லது கட்டாயமாகவோ வழங்கிய வரி 'பலி' எனப்பட்டது.

iii) கிராமணி – படைத்தளபதி: இது தவறான இணை. வேத காலத்தில் கிராமத்தின் தலைவரே 'கிராமணி' என அழைக்கப்பட்டார். படைத்தளபதி 'சேனானி' என்று அழைக்கப்பட்டார்.

iv) சமிதி – மக்கள் கூடும் இடம்: இது சரியான இணை. வேத காலத்தில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் கூடி விவாதிக்கும் பொதுச் சபை 'சமிதி' எனப்பட்டது.

109. கீழ்காணும் இணைகளை ஆசித்து தவறான இணையை வெளிக் கொணர்க.

i) குறிஞ்சி – காடு சார்ந்த இடமாகும்
ii) பெருநற்கிள்ளி – ராஜசூயம்
iii) சேரர் – வஞ்சி
iv) பாலை – மணல் சார்ந்த வறண்ட நிலப்பகுதி

A) (ii) B) (iv)
C) (iii) D) (i)

விளக்கம் : **விடை : (D)**

i) குறிஞ்சி – காடு சார்ந்த இடமாகும் (தவறு):

சங்க இலக்கியத்தில் குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடமும் ஆகும். காடும் காடு சார்ந்த இடமும் என்பது முல்லை நிலத்தைக் குறிக்கும். எனவே இந்த இணை தவறானது.

ii) பெருநற்கிள்ளி – ராஜசூயம் (சரி):

சோழ மன்னனான பெருநற்கிள்ளி 'ராஜசூயம்' என்ற யாகத்தை நடத்தியதால், அவன் 'ராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி' என்று அழைக்கப்படுகிறான்.

iii) சேரர் – வஞ்சி (சரி): சேர அரசர்களின் தலைநகரம் வஞ்சி ஆகும்.

iv) பாலை – மணல் சார்ந்த வறண்ட நிலப்பகுதி (சரி)

110. கீழ்காணும் இணைகளை கவனிக்கவும்.

i) குஷாண அரசர் – சாகர்கள்
ii) முதல் சாக ஆட்சியாளர் – மௌஸ்
iii) காந்தராக் கலை – சீனா
iv) எரித்ரியக் கடலின் – மெகஸ்தனிஸ் பெரிப்ளஸ்

மேற்கண்டவற்றில் எந்த இணை சரியானது?

A) (i) B) (ii)
C) (iii) D) (iv)

விளக்கம் : **விடை : (B)**

i) குஷாண அரசர் –சாகர்கள் (தவறு):

குஷாணர்களும் சாகர்களும் மத்திய ஆசியாவிலிருந்து வந்த வெவ்வேறு வம்சங்களைச் சேர்ந்தவர்கள். குஷாண வம்சத்தின் மிக முக்கியமான அரசர் கனிஷ்கர் ஆவார்.

ii) முதல் சாக ஆட்சியாளர் மௌஸ் (சரி):

இந்தியத் துணைக் கண்டத்தில் ஆட்சியை சாகர்களின் நிலைநாட்டிய இந்தியாவின் முதல் சாக ஆட்சியாளர் மௌஸ் ஆவார். இவர் காந்தாரப் பகுதியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். எனவே, இந்த இணை சரியானது.

iii) காந்தாரக் கலை – சீனா (தவறு):

காந்தாரக் கலை என்பது கிரேக்க மற்றும் இந்தியக் கலை மரபுகள் இணைந்து உருவான ஒரு தனித்துவமான கலை வடிவமாகும். இதற்கும் சீனாவிற்கும் நேரடித் தொடர்பு இல்லை.

iv) எரித்திரியக் கடலின் பெரிப்ளஸ் –மெகஸ்தனிஸ் (தவறு):

'எரித்திரியக் கடலின் பெரிப்ளஸ்' (Periplus of the Erythraean Sea) என்ற கடற்பயண நூலை எழுதியவர் யார் என்று துல்லியமாகத் தெரியவில்லை. மெகஸ்தனிஸ் எழுதிய புகழ்பெற்ற வரலாற்று நூல் 'இண்டிகா' (Indica) ஆகும்.